# நகுலநாதம்







## திரு.நல்லையா நகுலநாதன்

பிரதி அதிபர்

யாழ்.நாவாந்துறை றோ.க.வித்தியாலயம்

அவர்களின்

## சேவை நயப்பு விழா மலர்

01.08.2013

# சேவையின் நாயகன்



திரு.நல்லையா நகுலநாதன்

பிரதி அதிபர்

யா/நாவாந்துறை றோ.க. வித்தியாலயம்

வித்தியாலய சேவையில்

1988-10-10 -- 2013-07-31

# நகுலநாதம் - ஒரு உணர்வுப் பகிர்வு

நாவாய் கல்வி வரலாற்றில் தன் அர்ப்பணிப்பு மிகு பணியால் தடம் பதித்த
பெருமதிப்பிற்குரிய பிரதி அதிபர்
**திரு.நல்லையா நகுலநாதன்** அவர்களின்
மகத்தான கல்விப்பணியின் மகுடமாக மலர்கிறது நகுலநாதம்.

நகுலநாதம் இதழியல் நியமங்களின் தொகுப்பல்ல. மாறாக......
உணர்வுப் பிரவாகங்களின் எதிரொலிப்பு.
உண்மை மனிதனின் வாழ்வியல் பதிவு.
இலைமறைகாயாக வாழ்ந்த சாதனையாளனை வரலாறாடிக்கும் சுவடி.
நாவாய் மக்கள் காவிய நாயகனுக்கு நன்றியுடன் அளிக்கும் விருது.

நகுலநாதம் மலர...
ஆக்கம் ~ ஆதரவு ~ ஆலோசனை ஈர்ந்த பெரியோர்க்கும்,
அனுசரணை நல்கிய நாவாய் வாழ் அன்பு நெஞ்சங்களுக்கும்,
வடிவமைத்து உயிரூட்டிய சகோதரி மோகனா,
ஒப்பு நோக்கி செம்மைப்படுத்திய சகோதரி கௌரி,
தோள் கொடுத்த தோழன் மகேஸ்வரன், தம்பி சுரேஸ்
அச்சிட்டு நூலுருவாக்கிய யாழ்.ஜெயா பதிப்பகத்தினர்,
முகப்பிற்கு வனப்பூட்டிய நல்லூர் பிள்ளையார் பதிப்பகத்தினர்,
யாவருக்கும் இதயபூர்வ நன்றிதனை சமர்ப்பிக்கின்றேன்.

நகுலநாதன் என்னும் உத்தமனுடன் நானும் வழிநடந்தேன் என்பதே என் வாழ்வின் சாதனை என எண்ணி பூரிப்படைகின்றேன். நகுலநாதத்தை தரிசிக்க உங்களை கரம்கூப்பி
வரவேற்கின்றேன்.




*அன்புடன்*
*எப்.எக்ஸ்.அன்ரன்*

# வாழ்க்கைக் குறிப்பு

பெயர் :- திரு.நல்லையா நகுலநாதன்

பிறப்பு :- 30-05-1954 காரைநகர்

கல்வி :- கலாநிதி தியாகராஜா இந்துக் கல்லூரி, காரைநகர்

தகமை :- பயிற்றப்பட்ட விஞ்ஞான ஆசிரியர்

சேவை :- இலங்கை ஆசிரியர் சேவை (S.L.T.S ) -1

## தகவல்

முதல் நியமனம் 01-02-1977

பாடசாலைகள்

| | |
|---|---|
| யா/மூளாய் சைவப்பிரகா வித்தியாலயம் | 01-02-1977 - 31-12-1979 |
| பலாலி ஆசிரிய கலாசாலை | 01-01-1980 - 31-12-1982 |
| இ/அல் அக்சா ம.வித்த்தியாலயம் | 01-01-1983 - 28-02-1988 |
| யா/ஊர்காவற்துறை சென்.அன்ரனிஸ் கல்லூரி | 01-03-1988 - 09-10-1988 |
| யா/நாவாந்துறை றோ.க.வித்தியாலயம் | 10-10-1988 - 31-07-2013 |

பகுதித்தலைவர் 26-07-1994 - 09-02-1999

பிரதி அதிபர் 01-02-1999 - 01-08-2013

பதில் அதிபர் 11-06-2008 - 31-12-2008

பொதுச்சேவை:- மாவட்டச் செயலாளர், தமிழர் ஆசிரியர் சங்கம், யாழ் மாவட்டம்

## குடும்ப விபரம்:-

தந்தை :- சிதம்பரப்பிள்ளை நல்லையா

தாய் :- நல்லையா பரமேஸ்வரி

மனைவி :- வசந்தா நகுலநாதன் (ஆசிரியை)

பிள்ளைகள் :- கௌசிகா நகுலநாதன் (மாணவி)

நகுலநாதன் லவலோஜன் (மாணவன்)

# பங்குத்தந்தையின் வாழ்த்துச் செய்தி



ஆசிரியர் **திரு.நல்லையா நகுலநாதன்** அவர்களின் யா/ நாவாந்துறை றோ.க. வித்தியாலய சேவை நயப்பு மலருக்கான வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகிறேன். ஆசிரியர் திரு.ந.நகுலநாதன் அவர்கள் நாவாய் மண் போற்றும் பெருமனிதர். தனது நீண்டகால ஆசிரியர் பணியினூடாக மக்கள் மனம் கவர்ந்த ஒருவர். மாணவச்செல்வங்களின் நெஞ்சங்களில இடம்பிடித்த ஓர் நல்லாசான். நாவாய் மண்ணின் நீண்டகால பாடசாலைப் பணிவாழ்வில் அவருக்குக்கிடைத்த ஒவ்வொரு நாள் அனுபவமும் புதியதாகவே இருந்தது. ஏனென்றால் கடந்த இருபத்துநான்கு வருடங்களுக்கு மேலாக ஒரே இடத்தில் சலிப்பின்றி தன்னை அர்ப்பணித்து பணி புரிந்துள்ளார்.

யா/ நாவாந்துறை றோ.க. வித்தியாலயத்தில் 10-10-1988ல் தனது பணியை ஆரம்பித்த ஆசிரியர் அவர்கள் பகுதித்தலைவராகவும் (26-07-1994--09-02-1999) பிரதி அதிபராகவும் (10-02-1999--01-08-2013) ஆற்றிய சேவையினை நாவாய் மக்கள் என்றுமே மறக்கமாட்டார்கள் என்பது உறுதி. ஒவ்வொரு பிள்ளையின் குடும்பப் பின்னணிகளையும் நன்கு அறிந்து அப்பிள்ளையின் கல்விப்பயணத்தில் அப் பிள்ளையோடு பயணிப்பவர் தான் ஆசிரியர் **திரு.ந.நகுலநாதன்.**

பாடசாலை மாணவ மாணவியரின் கல்வியோடு மட்டுமல்லாமல் அவர்களின் ஆன்மீகத்திலும் அக்கறை கொண்டவர்தான் ஆசிரியர் என்றால் அது மிகையாகாது. இப்படியாக நாவாய் மண்ணோடும் மக்களோடும் ஒன்றாகக் கலந்து கல்விப்பணி செய்த மகானை மக்கள் ஒருபோதும் மறக்கமுடியாது.

இப்படியான ஒருவர் கல்விப்பணியிலிருந்து ஓய்வு பெறுவது எமக்குக் கவலையளித்தாலும் ஆசிரியருக்கு எம் நன்றியையும் மனம் நிறைந்த வாழ்த்துக்களையும் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

**அருட்பணி.பா.பி.இராசசிங்கம்**
**பங்குத்தந்தை**
**நாவாந்துறை**
**யாழ்ப்பாணம்.**

## நாவாய் மண்ணின் முதற்குரு மணியின் வாழ்த்துச் செய்தி



யாழ்/நாவாந்துறை றோ.க. வித்தியாலயத்தில் கடந்த இருபத்தைந்து ஆண்டுகளாக ஆசிரியராக, பகுதித்தலைவராக, பிரதி அதிபராகப் பணியாற்றி ஓய்வு பெறும் திரு.நல்லையா நகுலநாதன் அவர்களை பாராட்டி வாழ்த்தி நன்றி கூறுவதில் பெரு மகிழ்ச்சி அடைகின்றேன். கல்விக்கும், தமிழுக்கும் கடமை உணர்வுக்கும் பெயர் பெற்ற கடல்சூழ் அழகிய காரைநகர் என்னும் ஊரில் 1954ம் ஆண்டு இவர் பிறந்தார். அங்குள்ள அர்ப்பணம் மிக்க ஆசிரியர்கள் நிறைந்த கலாநிதி தியாகராஜா இந்துக்கல்லூரியில் கல்வி பயின்றார். துடிப்பு மிக்க அதேவேளை தனக்குள் ஒரு அமைதி மிக்க இளைஞனாக விளங்கிய அவர் சமுதாயத்தில் ஓர் சிறப்பு மிக்க பணியை ஆற்றி மக்களுக்கு நல்ல பல சேவைகளை ஆற்ற வேண்டும். நல்ல பல மனிதர்களை உருவாக்க வேண்டும் என்ற ஆர்வத்தோடு, பயிற்றப்பட்ட விஞ்ஞான ஆசிரியர் தகமையோடு இலங்கை ஆசிரியர் சேவையின் வழியாக தனது இளமைப்பருவத்திலேயே 23 வயதிலேயே ஆசிரியராக யாழ். மூளாய் வைசப்பிரகாச வித்தியாலயத்தில் முதல் நியமனம் பெற்றார். அதைத் தொடர்ந்து தனது பயிற்சிகளையும் பணிகளையும் வெவ்வேறு இடங்களில் ஆற்றி 10-10-1988ல் யாழ் நாவாந்துறை றோ.க. வித்தியாலயத்தில் நல்ல அனுபவமிக்க அர்ப்பணம் மிகுந்த ஆசிரியராக இணைந்தார். யாழ் மாவட்ட தமிழர் ஆசிரியர் சங்க மாவட்ட செயலாளராகவும் சிறந்த முறையில் செயலாற்றினார்.

“காலத்தால் அழியாதது கல்வி காலம் கடந்தும் எண்ணங்களில் நிலைப்பவர் ஆசிரியர்” அர்ப்பணம் மிகு ஆசிரியர் பணிக்கு நிகரே இல்லை. ஏனெனில் இது முழு மனிதனாக வாழும் கலையை நமக்கு குழந்தைப் பருவத்திலிருந்தே தருவதோடு சிறந்த வாழ்விற்கான வழிகளைக் காட்டி நிற்கிறது. இதன் வழி ஆசிரியப்பணி எவ்வளவு அற்புதமானது மேன்மையானது என்பதை நாம் அறிவோம். விலைமதிப்பற்ற இளம் மனித உயிர்கள், உள்ளங்கள், வாழ்வுகள் ஒரு ஆசிரியரிடம் ஒப்படைக்கப்படுகின்றது. அவர்

அந்த மாணவச் செல்வங்களை பள்ளிப்பாடங்களோடு வாழ்க்கைப் பண்புகளையும், மனித வாழ்வின் ஓட்டத்தில் சரியான இலக்கை அடைவதற்கான வழியையும், நல்ல குணநலன்களையும் காட்டி நிற்கிறார். வாழ்வின் உண்மையான அர்த்தத்தை காணச் செய்கிறார். நல்ல பழக்க வழக்கங்ளை ஊட்டுகிறார். முதிர்ச்சியடைந்த மனிதர்களாக மாற்றுகிறார். சேவை நிறை பண்புகளோடு உலகில் வாழ வழி வகுக்கின்றார்.

தனது ஆசிரியப் பணியில் பிரதி அதிபராகவும் பணியாற்றி ஓய்வு பெறும் நம் அன்புக்கும் மதிப்பிற்குமுரிய **திரு.ந.நகுலநாதன்** தனது ஆசிரியப் பணியில் மிக அர்ப்பணத்தோடு செயற்பட்டார். மாணவ, மாணவிகளுக்கு ஆற்றவேண்டிய பணியை முழுமையாகச் செயலாற்றினார். அவருடைய வாழ்வே பல்கலை வாழ்வியல் நிறைந்த ஒரு புத்தகமாக மாணவர் முன் மிளிர்ந்தது. அவர்களின் வாழ்வில் அன்பையும், எதிர்கால நம்பிக்கையையும் கொடுப்பதாக அமைகின்றது. அவர் அன்பானவராகவும், அமைதி நிறைந்தவராகவும், பணிந்த மனநிலையோடு பணியாற்றுபவராகவும் விளங்கினார். நமது நாட்டின் போர்க்கால சூழலில் அல்லலுற்று தமது கல்விச் செல்வத்தை எப்படிப் பெறுவது என்று வாழ்க்கையின் இருளில் தள்ளப்பட்ட நாவாந்துறையின் சிறுவர், சிறுமியர் இளைஞர், இளம் பெண்களுக்கு இவரின் சேவை கலங்கரை விளக்காய் திகழ்ந்தது.

அவருடைய இந்த அளப்பரிய ஆசிரிய சேவைக்கு நன்றி கூறி நாமும் எம் மக்கள் எல்லோரும் நன்றிப் பூக்களையும், பாக்களையும் எம் உள்ளங்களின் ஆழத்திலிருந்து வழங்குகின்றோம். இங்கு அவரின் 25 ஆண்டு சேவையானது ஒரு போதும் மறக்கப்படாது. இந்த நன்றி நிறை நேரத்தில் அவரின் அன்பு மனைவி ஆசிரியை வசந்தா அவர்களுக்கும், இரண்டு பிள்ளைகளுக்கும் கூட எமது வாழ்த்துக்களையும் நன்றிகளையும் கூறி நிற்கின்றோம்.

**அருட்பணி அ.ம.ஸ்ரீபன் செ.தா**
**அதிபர், அருள் ஆச்சிரமம்**
**யாழ்ப்பாணம்.**

## பொதுநிலை ஆணைக்குழு இயக்குனரின் வாழ்த்துச் செய்தி



நாவாந்துறை றோக. வித்தியாலயத்தின் பிரதி அதிபர் திரு.நல்லையா நகுலநாதன் அவர்கள் ஓய்வு பெறுகிறார். என்பதை அறிந்த போது அவர் பற்றிய பல உயர்ந்த நினைவுகள் மனதில் எழுகின்றன. 2000ம் ஆண்டிலிருந்து 2009ம் ஆண்டு வரை நாவாந்துறைப் பங்கின் பங்குத்தந்தையாகப் பணியாற்றும் பேறு எனக்கு கிட்டியது. போர் உச்சமடைந்த காலம். இடம் பெயர்ந்து மக்கள் ஆலயத்திலும், பாடசாலைகளிலும் தஞ்சமடைந்த நாட்கள் ஒரு புறம், மாணவர்களின் கல்வித்தரத்தைப் பேணி பாடசாலையை கிரமமாக நடத்த வேண்டிய . தேவை. மறுபுறம், இடம்பெயர்ந்து அல்லலுறும் மக்களுக்கு மனிதாபிமானத்துடன் பணியாற்ற வேண்டிய அவசியம். இத்தகைய ஒரு இக்கட்டான சூழலில் தான் உருவத்தால் சிறியவராயினும் உள்ளத்தால் மிக உயர்ந்த நகுலநாதன் என்னும் நல்ல ஒரு மனிதனோடு உறவாட எனக்குச் சந்தர்ப்பம் கிட்டியது.

புன்சிரிப்பும், சாந்தமான தோற்றம், இன்சொல் அன்றி வன்சொல் அறியாத பண்பு, காலத்தின் தேவையை சீர்தூக்கி முடிவெடுக்கும் சமயோசிதம், கடமையில் கருத்து, நேரம் தவறாத அர்ப்பணம், சமூகம் மட்டில் அக்கறை, அரசியல்தெளிவு, கேட்போரைக் கவரும் கணீரென்ற மேடைப்பேச்சு, நேர்த்தியான உடை இப்படி இந்த நல்ல மனிதரிடம் நான் கண்ட பண்புகளை விரித்துக் கொண்டே போகலாம்.

தனது பணிவாழ்வில் கால் நூற்றாண்டுகளை அவர் நாவாந்துறை மாணவ சமுதாயத்திற்கே அர்ப்பணித்தார். தமது இயல்புக்கும் மேலாக இவர் சமூகத்திற்கும் பாடசாலைக்கும் பணியாற்றினார் என்பதற்கு நாவாந்துறை சமூகமே சாட்சி. நாவாந்துறைப் பாடசாலைச் சமூகத்திற்கென இவர் தமது ஆற்றல், திறமை, நேரம் என்வற்றை மட்டுமல்ல ஒரு விதத்தில் தனது பதவி உயர்வையும் கூடத் தியாகம் செய்தவர். உண்மையில் எனது அனுபவத்தில் இவர் ஒரு "Gentleman" தமிழில் இதற்கு கனவான் என்று சொல்கிறார்கள்.

நாவாந்துறையில் இவருக்கென ஒரு மாணவப் பரம்பரையே இருக்கிறது. தமது பாடசாலைக்காகவும், சமூகத்திற்காகவும் கால் நூற்றாண்டுகளாக தன்னையே கரைத்துக் கொண்ட இந்த உயர்ந்த மனிதனுக்கு நல்லாசானுக்குரிய கௌரவத்தை, மதிப்பை நாவாந்துறைச் சமூகம் என்றென்றைக்கும் வழங்கும் என்பது என் நம்பிக்கை.

இவர் ஓய்வு பெறுதவதால் ஏற்படும் வெளியை நிறைவு செய்வதென்பது அவ்வளவு இலகுவாக இருக்கப் போவதில்லை என்பது எனக்கு நன்றாகத் தெரியும். அந்த வெளி இவரது பணியின் தனித்துவத்தை மேலும் உணரப்பண்ணும்.

ஓய்வு பெற்றுச் செல்லும் பிரதி அதிபருக்கு நல்ல ஓய்வையும், ஆரோக்கியமான நீண்ட ஆயுளையும் ஆசிக்கின்றேன். உள்ளத்தின் ஆசைகள், விருப்பங்கள் நிறைவேறப்பெற்று அவரது வாழ்வு நிறைவு காண எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சி நிற்கின்றேன்.

**அருள்பணி. ம.வி.இ.ரவிச்சந்திரன்**

# வடமாகாண கல்வி அமைச்சு செயலாளரின் வாழ்த்துச் செய்தி



யா/நாவாந்துறை றோ.க வித்தியாலயத்தில் கடந்த 24 வருடங்களாக அர்ப்பணிப்பான சேவையை நல்கிய பிரதி அதிபர் நல்லையா நகுலநாதன் அவர்களின் சேவை நயப்பு மலருக்கு ஆசிச் செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

1977ம் அண்டு முதல் இவர் ஆசிரியர் சேவையில் இணைந்து அளப்பரிய கல்விச் சேவையை கல்விப்புலத்திற்கு வழங்கியுள்ளார். இவர் தனது சேவைக் காலத்தில் தன்னை பொதுச்சேவையிலும் ஈடுபடுத்தியமை பாராட்டத்தக்கவொரு அம்சமாகும்.

இவர் தனது 36 வருட கால அரச சேவையில் நற்பண்புகளும், ஒழுக்கமும் நிறைந்த மாணவ சமுதாயத்தை உருவாக்கிய கல்விப்பணியை வாழ்த்துவதுடன், இப்பணி மேலும் தொடரவும், இவர் நீண்ட ஆயுளுடன் தனது குடும்பத்தினருடன் மகிழ்ச்சியாக வாழ்ந்திடவும் எல்லாம் வல்ல பரம்பொருளின் அருட்கடாட்சம் வேண்டிப் பிரார்த்திக்கின்றேன்.

**சி.சத்தியசீலன்**

**செயலாளர்,**

**கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சு,**

**வட மாகாணம்.**

# மாநகர முதல்வரின் வாழ்த்துச் செய்தி



யாழ்/நாவந்துறை றோ.க.வித்தியாலயத்தின் பிரதி அதிபர் திரு.நல்லையா நகுலநாதன் ஆசிரிய சேவையிலிருந்து பணிவோய்வு பெறும் இத்தருணத்தில் அவரின் அர்ப்பணம் மிக்க பணிதனை வாழ்த்தி இச் செய்தியினை வழங்குவதில் உவகையுறுகின்றேன்.

'நகுலன்' என்று அன்பாக அழைக்கப்படும் திரு.ந.நகுலநாதன் அவர்கள் மனிதாபிமானமும், சேவையுணர்வும் மிக்க ஓர் கல்விப்பணியாளர். துடிப்புமிக்க விஞ்ஞான ஆசிரியராக தன் பணிதனை ஆரம்பித்து, தன் அறிவு, ஆற்றல், அனுபவத்தால் சிறந்த கல்வி நிர்வாகியாக தன்னை நிலைப்படுத்தினார்.

தன் கவர்ச்சிகரமான கற்பித்தல் முறைகளால் மாணவரை ஈர்த்தது போன்று தன் அன்பான அணுகுமுறைகளால் சக ஆசிரியர்களையும், சமூகத்தையும் ஈர்த்தார்.

எனது மாநகரசபை எல்லைக்குட்பட்ட வனப்பு மிகு கடலோர நாவாந்துறைப் பிரதேசத்தில் 24 வருடங்கள் அளப்பரிய சேவைதனை விருப்புடன் ஆற்றி பிரதேச மக்களின் அபிமானத்தை பெற்றார்.

ஆசிரிய தொழிற்சங்கவாதியாகவும் தன்னலமற்ற சேவையாற்றினார். இத்தகைய முன்னுதாரண ஆசிரியரை சகல சௌபாக்கியங்களுடனும் நீடுழி வாழ வாழ்த்துகின்றேன். அவரின் சமூகப்பணி தொடர ஆசிக்கின்றேன்.

**திருமதி.யோகேஸ்வரி பற்குணராஜா**
**மாநகர முதல்வர்**
**யாழ்.மாநகரசபை**

# வலயக் கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி



திரு.நல்லையா நகுலநாதன் அவர்கள் 24 வருடங்கள் யா/நாவாந்துறை றோ.க வித்தியாலயத்தில் பணிபுரிந்து ஓய்வு பெறுகின்றார். பயிற்றப்பட்ட விஞ்ஞான ஆசிரியரான இவர் தனது சேவைக்காலத்தில் ஆசிரியராக, பகுதித் தலைவராக, பிரதி அதிபராக அரும்பணியாற்றியுள்ளார். இவர் ஆசிரியர் சேவையை சிறப்புடன் ஆற்றி மாணவர்களது கல்வி வளர்ச்சியில் அக்கறையுடன் செயற்பட்டவராவர். வறிய மாணவர்களது கல்வி வளர்ச்சிக்கென அரும்பணியாற்றி பிரதி அதிபராக யா/நாவாந்துறை வித்தியாலயத்தில் கடமையாற்றி ஓய்வு பெறுகின்றார்.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தினது யாழ் மாவட்டச் செயலாளராகவும் கடமையாற்றி தொழிற் சங்கப் பணியிலும் ஈடுபட்டு ஆசிரியர்களது தொழில் சார் தேவைகளை நிறைவேற்றியுள்ளார்.

இவரது சேவைக்காலத்தில் ஆற்றியுள்ள பணிகளைப் பாராட்டுவதோடு ஓய்வு காலம் சிறக்கவும் வாழ்த்துகின்றேன்.

**செ.உ தயகுமார்**

**வலயக்கல்விப் பணிப்பாளர்**

**யாழ்ப்பாணம்.**

## பணி நயப்பு நாளில் மனம் மகிழ்ந்த வாழ்த்துக்கள்



கல்விப் பயணத்தில், கல்விப்பணியில் 36 ஆண்டுகள் பணியாற்றி அகவை 59ல் சுயவிருப்ப அடிப்படையில் பணியில் இருந்து ஓய்வு பெறும் நண்பரும், தொழிற்சங்கத் தோழருமான **நல்லையா நகுலநாதன்** அவர்களுக்கு சேவை நயப்பு நன்நாளில் வாழ்த்துத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன். 1977ல் விஞ்ஞான ஆசிரியராகக் கல்விப் பயணத்தில் தடம்பதித்து பகுதித்தலைவராக, பிரதிஅதிபராக பணியில் உயர்ந்து இலங்கைத்தமிழர் ஆசிரியர் சங்கத்தில் நீண்டகால தொழிற்சங்கவாதியாக வளர்ந்து யாழ் மாவட்டச் செயலாளராகப் பணியாற்றி ஆசிரியர்கள் நலன்கள் தொடர்பாக பல வேலைத்திட்டங்களை முன்னெடுத்தவர் நண்பர் நகுலநாதன். உண்மைக்கும், நேர்மைக்கும், நியாயத்திற்கும் குரல் கொடுக்கும் தொழிற்சங்கவாதியாக நான் இவரைப் பார்த்ததுண்டு.

பொருளாதார சமூக நிலைகளில் பல்வேறு மட்டுப்பாடுகளைக் கொண்ட ஒரு சமூகத்தில் கல்விக்காய் வேண்டி நின்ற மாணவர்களின் உயர்வுக்காக 24 வருடங்கள் யா/நாவாந்துறை றோ.க.வித்தியாலயத்தில் தன்னலம் கருதாது பணியாற்றினீர்கள். கல்வியில் மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ள சமூகத்தின் பிள்ளைகளுக்காக உழைத்தீர்கள். வசதிகள், வாய்ப்புக்கள் குறைந்த பின்தங்கிய பிரதேசப் பாடசாலைகளில் பணியாற்றியதும், தற்கால சூழலில் 1/4 நூற்றாண்டு கால தங்களின் பணியும் பாராட்டுவதற்கும் வாழ்த்துவதற்கும் உரியது.

எல்லோருக்கும் கல்வி கல்வியில் சமவாயப்பு, அனைவருக்கும் கல்வி, அனைவருக்கும் தரமான கல்வி என்று கல்வியில் ஜனநாயகப் பண்பை வளர்க்கும் செயற்பாடுகள் முனைப்புப் பெற்ற போதும் நடைமுறைப்படுத்தலில் இது பெரும் சவாலாக உள்ளது.

நாவாந்துறைப் பிரதேச மக்களின் வாழ்க்கையில் கல்வியினால் நீடித்து, நிலைத்துக் காட்டிய மாற்றங்களை ஏற்படுத்த முடியும். என்ற ஒரு தூர நோக்குடன் செயற்பாட்டதை அச் சமூகத்தவர்கள் கூறும் போது பெருமையாக உள்ளது! நீங்கள் பணியாற்றிய பாடசாலைகள் அனைத்தும் ஏழை மாணவர்கள் கல்வி கற்றமை, அவர்களுக்காக பணியாற்றியமை உங்களுக்கு மன நிறைவை தந்திருக்கும்.

ஓய்வு காலம் சிறக்கவும், நலமாக, வளமாக, மகிழ்வாக, பல்லாண்டுகாலம் வாழ நெஞ்சம் நிறைந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

வாழ்க வளமுடன்

**பொன்னம்பலம் அருணகிரிநாதன்**

**பிரதிக்கல்விப் பணிப்பாளர் (கல்வி முகாமைத்துவம்)**

**யாழ்ப்பாணக் கல்வி வலயம்**

# ஏழைகளின் தோழன்



இலங்கையின் கல்வி வரலாறு, பெருமை மிக்கது. காத்திரமானது. நம்பிக்கைத் தன்மை கொண்டது என கடந்த காலங்களில் உலகம் பெருமையாகப் பேசிக் கொண்டதை நாம் கேட்டிருக்கின்றோம். இவ்வாறான பேச்சுக்களின் உண்மைத் தன்மைக்கு ஆசிரிய பணியில் தம்மை உண்மையாக ஈடுபடுத்திக் கொண்ட குறிப்பிட்ட தொகுதி ஆசிரியர்களின் அளப்பரிய உழைப்பே காரணம் என நான் நம்புகின்றேன். அத்தகையவர்களில் ஒருவராக பிரதி அதிபர் நகுலநாதன் அவர்களை நான் பார்க்கின்றேன்.

சிறந்த விஞ்ஞான ஆசிரியராக உழைத்தவர் அனைவரதும் விருப்பத்துக்ககுரிய சேவையாளராகத் தொழிற்பட்டவர். பதவிகள், பட்டங்களுக்கு ஆசைப்படாது, ஏழை மாணவர்களின் கல்வி மேம்பாட்டுக்காக உழைத்தவர். இன்றைய காலத்தில் வசதி படைத்த பாடசாலைகளுக்கு அதிபராக வர எத்தனை போட்டிகளை நாம் காண்கிறோம். இவருக்குப் பல பாடசாலைகளின் அதிபராக வர வாய்ப்புக்கள் தேடி வந்த போதும் அவற்றை ஏற்காது நாவாந்துறைப் பிள்ளைகளுக்காக 24 வருடங்கள் சேவையாற்றியதனால் அப் பிரதேச மக்களின் உயிர் மூச்சாகி நிற்கின்ற பெருமையை நகுலன் சேர் பெறுகின்றார்.

இவர் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் மாவட்டச் செயலாளர் ஆகச் செயற்பட்ட காலத்தில் உதவிகள் தேவைப்பட்ட ஆசிரியர்களின் அனைத்துப் பிரச்சனைகளையும் இனிமையான தனது வார்த்தைகளால் உயர் அதிகாரிகளுடன் பேசி தீர்த்து வைத்த பெருமைக்குரியவர்.

நாவாந்துறைப் பிள்ளைகளுக்கு வசதியான பாடசாலை காணி, கட்டிடம் இல்லை என்பது தான் இவரது ஒரே கவலையாக என்னுடன் கதைப்பார். ஆயினும் கால் நூற்றாண்டு இப்பாடசாலைக்கு மனப்பூர்வமான சேவையை அளித்த பெருமைக்குரிய பிரதி அதிபர் நகுலநாதன் என்ற பெருமை பெறுகின்றார்.

இவர் 3ம் இலக்கத்தில் பிறப்பு எண்ணைக் கொண்டவர். அதனால் அந்த எண்ணுக்குரிய நேர்மை, உறுதி, இரக்கம் என்பவற்றுடன் எடுத்த எந்தக் காரியத்தையும் சிறப்பாக முடிக்கும் ஆற்றல் கொண்டவர் கிறிஸ்தவ பாரம்பரியங்கள், கலாச்சாரங்களை தானும் உள்வாங்கி, மாணவர்களை அதில் இருந்து வழுவாது பாதுகாத்த ஒரு பாதுகாவலனாக செயற்பட்டு ஓய்வு பெறும் எனது அன்பு நண்பரும் சிறந்த பிரதி அதிபருமான நகுலநாதன் அவர்களின் ஓய்வுக்காலம் சிறக்க வாழ்த்துகின்றேன்.

**சீ.மாணிக்கராசா**

**பிரதிக்கல்விப் பணிப்பாளர்**

**யாழ்ப்பாணக் கல்வி வலயம்**

# கேட்டக் கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி



**திரு.நல்லையா நகுலநாதன்** அவர்கள் ஓய்வு பெறப் போகிறார் என்ற செய்தி எமக்கு கவலை தரும் செய்தியாகவே உள்ளது. நடமாடும் செயலகம் போன்ற அவரின் பணி என்ன, எங்கு, எப்போது கேட்டாலும் உடனடியாக தரவுகள், தகவல்களை அப்படியே தரும் ஆற்றல் கொண்டவர் நாவாந்துறை றோ.க. வித்தியாலயத்திலே கால் நூற்றாண்டைப் பூர்த்தி .செய்த பெருமை இவரையே சாரும். இவரின் இடைவெளி நிரப்பமுடியாத ஒன்றாகும்.

ஓய்வு காலம் சிறக்க எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

**சு.சண்முககுமார்**
**கோட்டக் கல்வி பணிப்பாளர்**
**யாழ்ப்பாணக் கல்விக் கோட்டம□**
**யாழ்ப்பாணம்.**



வடமாகாண கல்வி அபிவிருத்திக் குழு
NORTHERN PROVINCE EDUCATION DEVELOPMENT COMMITTEE

தலைமைச் செயலகம் :
இல : 238, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
Tel : 0212229822, 0774227574

Head Office :
No : 238, Stanly Road,
Jaffna.
E mail : lankanadu@yahoo.com

# "பலரோடும் பண்புடன் பழகும் நகுலன்"

யாழ்.நாவாந்துறை றோ.க வித்தியாலயத்தின் பிரதி அதிபர் திரு.நல்லையா நகுலநாதன் அவர்களின் கடமையுணர்வுடன் கூடிய சேவையை வாழத்துகின்றேன். கல்விச் சேவையிலிருந்து தனது 59 வது அகவையில் பணி ஓய்வு பெறகின்றார் என்ற செய்தி கவலையைத் தருகின்றது. நிர்வாக சேவையிலிருந்து கடமையுணர்வுடையவர்கள் ஓய்வு பெறுவது என்பது கவலையளிப்பதாகும். அவர்களுடைய அனுபவம் மீளப் பெற முடியாத ஒன்றாகும்.

யாழ்.நாவாந்தறை றோ.க வித்தியாலயம் கடற்கரையோரப் பாடசாலையாகும். ஆப்பகுதி மக்கள் கடல்தாயின் பிள்ளைகள். அன்றாடம் உயிரைப் பணயம் வைத்து தொழில் புரிபவர்கள். அவர்களுடைய பிரச்சனைகள் தனித்துவமானது. இந்தச் சூழலில் பெற்றோரை விட பாடசாலை ஆசிரியர்கள் தான் மாணவர்களை கண்ணும் கருத்துமாக வழிகாட்டும் பொறுப்புடையவர்கள். இத்தகைய உயர்ந்த பொறுப்பினை ஏற்று செயற்பட்டவர் திரு.ந.நகுலநாதன்.

பாடசாலை நிர்வாகம் சிறப்பாக அமைவதற்கு அதிபர் மூலகாரணமானவர். அதிபரின் செயற்பாடுகள் வெற்றியடைவதற்கு பிரதி அதிபர்,ஆசிரியர்கள் உறுதுணையாக அமைய வேண்டும். நாவாந்துறை றோ.க வித்தியாலயத்தின் அண்மைக்காலச் செயற்பாடுகள் எல்லாத்துறையிலும் வளர்ச்சி கண்டு வருகின்றது. இதற்கு உறுதுணையான பிரதி அதிபர் பணியிலிருந்து ஓய்வு பெறுகின்றார் என்பது கவலையாயினும், அவரது ஓய்வு காலத்தில் உடல்,உள நலத்துடன் நீண்ட காலம் மகிழ்வுடன் வாழ்வதற்கு இறைவனைப் பிரார்த்தனை செய்கின்றேன்.

மனிதனுக்கு ஓய்வு என்பது எப்போது? ஏன ஒரு வினா எழுகிறது. ஓய்வில்லை என்பதுதான் எனது பதில். திரு.நகுலநாதன் பாடசாலை சேவையிலிருந்து பணி ஓய்வடைந்து சமுகத்திற்கு ஏதாவது வழியில் பணியாற்றுவார் என நம்புகின்றேன்.

பண்புடைய பெருந்தகைகள் சிலர் இவ்வுலகில் இருப்பதால் தான் இவ்வுலகம் அழியாமல் இருக்கிறது. இல்லையென்றால் இந் நேரம் அது மண்ணோடு மண்ணாகியிருக்காதா? நண்பராகப் பழகி நயமான செயல்கள் செய்வோர் நல்ல இதயங்களில் என்றும் வாழ்வார்கள். பண்புடைய திரு.நல்லையா நகுலநாதனின் பணிக்கு தலைசாய்த்து வாழ்த்துகின்றேன்.



**சொல்லின் செல்வன்**
**இரா.செல்வவடிவேல்**
**தலைவர், வடமாகாணகல்வி அபிவிருத்திக்குழு**

# இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம்
## CEYLON TAMIL TEACHERS' UNION


தலைமைப் பணிமனை, 131,கண்டி வீதி, யாழ்ப்பாணம்.
Head Office, 131,Kandy Road, Jaffna.(Reg NO REGD NO.5001)
Email:tamilteachers@yahoo.com Web:www.tamilteachers.org


### சிறந்த தொழிற் சங்கத் தோழனாகவும், நல்லாசிரியராகவும் வாழ்ந்த மனிதர்

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் மூத்த சகோதரராக எம்மை வழிப்படுத்தி சங்கத்தின் வளர்ச்சிக்காகவும், ஆசிரியர்களின் உரிமைகளுக்காகவும் குரல் கொடுத்த நல்ல மனிதர் திரு.நல்லையா நகுலநாதன் அவர்கள், சங்கத்தின் ஆட்சிக்குழு உறுப்பினராக, கிளைச் செயலாளராக, மாவட்டச் செயலாளராக தாய்ச்சங்கத்தின் பொறுப்பு வாய்ந்த உறுப்பினராகவிளங்கிய நல்லதொரு தொழிற்சங்கத் தோழர்.

அதிபர், ஆசிரியர்களின் உரிமைக்காக பல்வேறு போராட்டங்கள், கூட்டங்கள், கருத்தரங்குகள், பேரவைக்கூட்டங்களில் முக்கிய பங்காற்றிய தொழிற்சங்கவாதி. உரிமைக்காகக் கொதித்தெழுந்தாலும் ஆசிரியர்களின் உரிமைகளை வென்றெடுக்க சாந்தமாக, சாணக்கியமாக செயலாற்றிய நல்லுள்ளம் கொண்ட ஆசிரியர், பிறந்த மண்ணின் மதிப்பிற்கு ஏற்ப பெருந்தன்மையுடனும், அப்பழுக்கற்ற குணநலனுடனும் முன் மாதிரியாக வாழ்ந்த நல்ல வழிகாட்டி.

நீண்ட காலம் யாழ்ப்பாணம் நாவாந்துறை றோமன் கத்தோலிக்க வித்தியாலயத்தின் ஆசிரியராக, பிரதி அதிபராக பணியாற்றியது பெருமைக்குரிய விடயம். வித்தியாலய சமூகத்தின் நல்மதிப்பையும், நல்லெண்ணத்தையும் பெற்றுக்கொண்ட நல்ல ஆசிரியர். பதவிகளுக்கு ஆசைப்படாமல் பிறர் நலனிலும், மாணவர்களின் நலனிலும் அக்கறைகாட்டிய திரு.ந.நகுலநாதன் அவர்களைப்போன்ற ஆசிரியர்கள் இனிவரும் காலங்களில் உருவாகுவதென்பது நடைபெறாத காரியமென்றே சொல்ல வேண்டும்.

ஆசிரியர்கள் எப்படி இருக்கவேண்டுமென்பதற்கு நல்ல உதாரணபுருஷராக வாழ்ந்து கொண்டிருக்கும் திரு.ந.நகுலநாதன் அவர்கள் நீண்ட ஆயுளுடன் மனையாளுடனும், குழந்தைகளுடனும் பல ஆண்டுகள் ஆரோக்கியத்துடன் வாழ எல்லாம் வல்ல இறையருளை வேண்டி நிற்கின்றேன். எப்பொழுதும் தொழிற்சங்கத் தோழனாக உறவினனாக வாழவேண்டுமென்று வாழ்த்துகின்றேன்.



என்றும் அன்புரிமையுடன்,

சரா.புவனேஸ்வரன்.
பொதுச் செயலாளர்.

# J/NAVANTHURAI R.C VIDYALAYAM

## யா/நாவாந்துறை றோ.க. வித்தியாலயம்

T.P No:- 0212228762   E-mail:- navanthurairc@yahoo.com   Add:- Navlar Road, Navanthurai, Jaffna.


## அதிபரின் வாழ்த்துச் செய்தி

### ஆசிரிய இமயம்



என் கால்நூற்றாண்டுக் கல்விப் பணியில் அசாத்திய ஆற்றல், அபரீதமான அறிவு, அற்புதமான ஆளுமை, ஆழமான அர்ப்பணிப்பு மிக்க எத்தனையோ அதிபர்கள் - ஆசிரியர்களைச் சந்தித்துள்ளேன். இத்தகைய சிறப்பார்ந்த - உயரிய கல்விச் சேவையாளர்களில் எனது கணிப்பில் முதலிடத்திற்குரியவர் மதிப்பிற்குரிய எம் பிரதி அதிபர் திரு.நல்லையா நகுலநாதன் அவர்களே.

நேரத்திற்கு கருமமாற்றல், திட்டமிட்டு செயற்படுதல், பலம் - பலவீனமறிந்து மேம்படுத்தல், மனித நேயத்திற்கும்- சுமுகமான தொடர்பாடலுக்கும் முன்னுரிமையளித்தல் என சகல விடயங்களிலும் சிறப்பியல்பு மிக்க ஆசிரியராக, கல்வி நிர்வாகியாக பணிவோய்வு பெறும் எம் பிரதி அதிபர் அவர்கள் திகழ்கின்றார்.

கல்விப் பணியாளர்களுக்கு முன்னுதாரணமாகிய அவர், தன் 36 வருடக் கல்விப்பணியில் 24 அகவைகளை எம் பாடசாலை சேவைக்கு அர்ப்பணித்திருப்பது அவரின் தன்னலமற்ற சேவை மனப்பாங்கிற்கு எடுத்துக்காட்டாகும். அவரின் அறிவு-ஆற்றல்- ஆளுமைக்கு பல உயர்பதவிகளையும், புகழ்பூத்த கல்விச்சாலைகளையும் அலங்கரிக்கும் வாய்ப்புக்கள் வந்த போதும் அவற்றைத் தியாகம் செய்து வசதி - வாய்ப்புக்கள் குன்றிய எம் பிரதேசத்தின் கல்வி விடியலுக்காய் அரும்பணியாற்றியதை நானும், நாவாய் மக்களும் நன்றியுணர்வுடன் போற்றுகின்றோம்.

திரு.நகுலநாதன் அவர்கள் எம் பாடசாலையில் விஞ்ஞான ஆசானாக - வியைாட்டுத்துறை முதல்வராக-பகுதித் தலைவராக - பிரதி அதிபராக - பதிலதிபராக பல பரிமாணங்களில் இரு தலைமுறை மாணவ சமுகத்திற்கு, நான்கு அதிபர்களுடன் இணைந்து பணியாற்றியமை வரலாற்றுப் பதிவாகும்.

எம் நாயகன் நகுலநாதன் அவர்கள் நெய்தல் நிலமாகிய நாவாய் மக்களின் வாழ்வியலையும்- மத நம்பிக்கைகளையும் புரிந்து நல்லிணக்கத்துடன் தம் பணி நல்கினார். இதனால் நாவாய் மக்களின் பெருமதிப்பைப் பெற்றார். நாவாந்துறை பிரதேச மக்களுக்கு அவர் பிரதி அதிபர் அல்ல.அவரும் அதிபரே.

திரு.நகுலநாதன் அவர்கள் சிறந்த பேச்சாளர், ஆங்கில மொழித் தேர்ச்சி மிக்கவர். பல்துறை அறிவும், ஸ்தாபன விதிகள் மற்றும் நிர்வாக நடைமுறைகளில் புலமையும் மிக்கவர். பிறருக்கு உதவுவதில் பின்நிற்காதவர். பாடசாலையின் பல்வேறு தேவைகளுக்கு தன் நிதியீந்தவர். அமைதியான சுபாபமும், எளிமையான வாழ்க்கை முறையும் கொண்டவர். ஆயினும் அநீதிகளைத் தட்டிக் கேட்கத் தயங்காதவர் - தவறாதவர்.

என்னை தோழனாக- ஆலோசகராக இருந்து வழிநடத்தியவர். இவரது பணிவோய்வு எனக்கும், பாடசாலைக்கும், சமுகத்திற்கும் பெரும் இழப்பாகும். இருப்பினும் அவரின் ஆலோசனைகளும், வழிநடத்தலும் எதிர்காலத்திலும் எமக்கு கிட்டும் என உறுதியாக நம்புகின்றேன். எம் பிரதி அதிபரின் அர்ப்பணிப்பு மிகு சேவைக்கு நன்றி கூறுகின்றேன். திரு.நகுலநாதன் அவர்களை உன்னத மனிதராக உலகிற்குத் தந்த அவரின் பெற்றோருக்கும், பின்புலமாய் இருந்த அவர் மனைவி, பிள்ளைகளுக்கும் நன்றிதனை சமர்ப்பிக்கின்றேன் பணிவோய்வு பெறும் பிரதி அதிபர் அவர்களையும், அவர் தம் குடும்பத்தினரையும் இறையருளுடன் வளமுடன்-நலமுடன் பல்லாண்டு வாழ வாழ்த்துகின்றேன்.

கடின உழைப்பே வெற்றி.

**அன்புடன்**
**எப்.எக்ஸ்அன்ரன்**



## *Mr.Nallaiah Nagulanathan, a very good Administator.....*



I am proud to write a few words about Mr.Nalliah Nagulanathan, our beloved Deputy. He is unique as he got his appinment at the age 23 and completed 35years of his teaching service in all Hindu, Muslim and Christian Schools. He served happily in all the schools because he respects all religions and abides by the Schools' traditions. Out of 35 years of his service as a teacher for 6 years, as the sectional head for 4 years and the rest 14 years as the Deputy Principal. He is a very good administrator and a leader. He respects every one from the Kinder grandener to the senior teacher. So is he in naturally loved by all. In that way, we are all sad to miss a loving and understanding leader who led our school for the last couple of decades. Some of the students studying in our school now, are the children of his student. Thus he is not only popular among the school students and the teachers but also among the society The society never fails to invite him for any big function. He respects their invitations and adorns the functions with his encouraging presence. If he is a nominee in the election, surly he will get a majority of votes from Navanthurai.

Though he had a chance of extending his year of teaching service if his leave tackled systematically, he did not want to take leave unnscessarily because he is a man. of conscience. He in not only regular to school but also he is known for his punctuality. He has all the details of the rules and regulations of the education departnment. in his finger tips. He knows the backround of each teacher and understandingly treats every one accordingly. When something goes wrong he knows how to tackle the situation and bring peace. Thus he is a man of wisdom. He is a man of simplicity. We the school community had already startded feeling that we are missing a great personality of our time.

Rev.Fr.M.Shoban Rufus
Acting Deputy Principal
J/Navanthurai R.C.Vidyalaya,

# அருட்சகோதரியின் வாழ்த்துச் செய்தி



கடந்த 24 வருடங்களாகத் தனது ஆசிரிய பணியை யாழ்/ நாவாந்துறை றோமன் கத்தோலிக்க வித்தியாலயத்தில் ஆற்றி மக்களினதும், மாணவர்களினதும் மனங்களில் இடம் பிடித்த பிரதி அதிபர் திரு.நல்லையா நகுலநாதன் அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதில் நான் பெரும் மகிழ்ச்சி அடைகின்றேன்.

கடமையுணர்வும், சேவை மனப்பான்மையும், கடவுள் பக்தியும் நிறைந்த இவர் தனது பிரதி அதிபர் என்ற பதவியுடன் மட்டும் பணி செய்தவரல்ல மாறாகப் பாடசாலை நிகழ்வுகள் அனைத்திலும் இலைமறை காயாக இருந்து பெரும் பணியாற்றியவர். திரு.நகுலநாதன் ஆசிரியர் அவர்கள் பழகுவதற்கு மிகவும் இனிமையானவர், அமைதியும், சாந்தமும் நிறைந்தவர். பேச்சுத் திறனிலே மேன்மையானவர். ஒரு ஆசானுக்கு இருக்க வேண்டிய பண்புகள் அனைத்தையும் தன்னகத்தே கொண்டு வாழ்ந்து காட்டியவர். உதவி புரிவதில் தாராள உள்ளம் படைத்தவர். சமய நிகழ்வுகளில் கலந்து தனது பிரசன்னத்தினால் அனைவரையும் மகிழ்விப்பவர்.

தனது ஆசிரிய சேவையில் நீண்ட ஒரு காலத்தை நாவாந்துறைப் பாடசாலை மாணவர்களுக்காகத் தியாகம் செய்த எம் ஆசிரியர் திரு.நல்லையா நகுலநாதன் அவர்களைப் பாராட்டுவதும் நன்றி நவில்வதும் மகிழ்ச்சியும், பெருமையும் நிறைந்த நிகழ்வாகும்.

அன்பான பிரதி அதிபர் அவர்களே! எனது பணிக்காலத்தில் உங்களது சேவையை நான் நன்கு அறிவேன். உங்களுடைய இந்த ஆசிரிய சேவை மிகவும் பரந்து விரிந்த சேவை. நாவாந்துறை மண்ணில் பல தலைமுறைகள் உங்கள் சேவையை பெற்றுள்ளார்கள். இது பாடசாலைக்கும் கிராமத்திற்கும் மாணவர்களுக்கும் கிடைத்த பெரும் பாக்கியம். எனவே 59வது அகவையில் பணிவோய்வு பெறும் உங்களை அன்புடன் வாழ்த்துகின்றேன்.

**அருட்சகோதரி மேரி ஜெசி நீக்கிலாப்பிள்ளை**
**நல்லாயன் இல்லத் தலைவி**
**நாவாந்துறை**

# முன்னாள் சக ஆசிரியரின் வாழ்த்துச் செய்தி



ஓய்வு பெறும் உப அதிபர் திருவாளர் நல்லையா நகுலநாதனின் சேவைநலனுக்கு நன்றி நவிலும் நன்நாளில் நன்றியும் நல் வாழ்த்தும் கூறும் நல் நெஞ்சங்களுடன் நானும் உடன் இணைந்து நன்றியும் பாராட்டும் கூறி பெரும் மகிழ்ச்சி அடைகின்றேன்.

நாவாந்துறை சமூகத்திற்கும் ஆசிரியர் குழாமிற்கும் உங்கள் சேவை அளப்பரியது. ஏறக்குறைய கால் நூற்றாண்டு சேவையில் உங்களோடு பணி புரிய வந்து போனவர்களில் நானும் ஒருவர். உங்களைப் போன்ற ஆழுமையுடைய ஒருவரோடு பணிபுரிய எனக்குக் கிடைத்தது ஓர் அரிய சந்தர்ப்பம் என்றே நான் கருதுகின்றேன். சிறப்பாக உங்கள் ஆலோசனையும், வழிகாட்டலும், நிதானமான பேச்சு, பொறுமையும் ஆசிரிய சமூகத்திற்கு ஓர் எடுத்துக் காட்டாகும் உங்கள் ஓய்வு நாவாந்துறை பாடசாலைக்கு ஓர் இழப்பாகும்.

இனிவரும் காலத்திலும் நீங்கள் ஆன்மீக, உடல், உள நலத்துடன் வாழ வாழ்த்தி நிற்கின்றேன்

Sr. Virginie
**அருட்சகோதரி. மேரி வேர்ஜினி**
ஆசிரியை
கொ/அன்ரனிஸ் கல்லூரி
கொழும்பு

# சேவை நயமிக்கோன் எங்கள் நகுலநாதன்



யாழ்ப்பாணக் கல்வி வலயத்தின் மேற்கு கரையமைந்த நாவாந்துறை றோமன் கத்தோலிக்க வித்தியாலயத்தின் நீண்டநாள் புகழ் பூத்த பிரதி அதிபர் திருவாளர் நல்லையா நகுலநாதன் அவர்களை அவரது பல்லாண்டுகால கல்விச் சேவை நிறைவில் வாழ்த்துவதில் பெருமகிழ்வு அடைகின்றேன்.

சப்த தீவுகளில் நகுலநாதன் அவர்கள் 01-02-1977ம் ஆண்டில் இளநிலை ஆசிரியராக கல்விச் சேவையில் அடி எடுத்து வைத்த நாள் முதல் சிறந்த விஞ்ஞான ஆசிரியராக தனது கடமையை நிறைவாகச் செய்து வந்த ஒருவர் 1977ம் ஆண்டு முதல் 1988ம் ஆண்டுவரை பல்வேறு பாடசாலைகளில் பணிபுரிந்ததின் பின்னர் நாவாந்துறை றோ.க.வித்தியாலயத்தில் ஆசிரியராக வருகை தந்து இன்றுவரை 24 வருடங்களுக்கு மேற்கூறப்பட்ட காலத்தில் அர்ப்பணிப்பான சேவையை இப்பாடசாலைக்கு ஆற்றியுள்ளார். இக்காலப்பகுதியில் அவர் பகுதித்தலைவராகவும் அதன் பின்15 வருடகாலப்பகுதிக்குள் பொறுப்புமிக்க பிரதி அதிபராகவும் பதவி உயர்த்தப்பட்டு தனது கடமையை செவ்வனே செய்து வந்துள்ளார்.

திரு.நகுலநாதன் அவர்களை 2000ம் ஆண்டளவில் இருந்து நான் நன்கறிவேன் பாடசாலைக்காக, அதன் வளர்ச்சிக்காக அவர் ஆற்றிய பணிகள் என்னை அவர்பால் ஈர்க்க வைத்துள்ளது. இக்காலத்தில் நான்கு அதிபர்களின் கீழ் சிறந்த பிரதி அதிபராக கடமையாற்றியுள்ளார். அனைத்து அதிபர்களுக்கும் பக்கபலமாக பாடசாலையின் வளர்ச்சியில் பணிபுரிந்துள்ளார். அதிபர்கள் ஓய்வு பெறும் போதெல்லாம் ஏற்பட்ட இடைக்காலப்பகுதியில் பதில் அதிபராக கடமையாற்றி சிறப்பான வளர்ச்சியை ஏற்படுத்திய ஒருவர் பாடசாலையின் அதிபராக இவர்தான் வருவார் என எதிர்பார்த்திருந்த போதெல்லாம் தரத்துடன் கூடிய அதிபர்கள் பதவியைப் பெற்றுவந்து இவரது நம்பிக்கையை தகர்த்த போதும் கூட எவ்வித மனங்கோணலும் இல்லாது அத்தனை அதிபர்களுக்கும் தோளோடு தோள்நின்று கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளின் துணை நின்றதுடன், பௌதீக வளர்ச்சியில் அதீத அக்கறை காட்டிய ஒருவராகும். யாழ்ப்பாண கோட்டப் பாடசாலைகளிலுள்ள அத்தனை பிரதி அதிபர்களுக்குள்ளும் இவருக்கு சிறப்பான இடமுண்டு.

ஒரு இந்துவான நகுலநாதன் கத்தோலிக்க பாடசாலைச் சமூகம் ஒன்றின் பேராதரவைப் பெற்று நீண்ட காலம் பிரதி அதிபராகவும், அதிபராக ஏற்பதற்கும் கூட தகுதியுடையவராக இருந்தாரெனின் அவரது அர்ப்பணிப்பான சேவையே காரணம் எனலாம். இவரது இல்லாமை பாடசாலைச் சமூகத்திற்கு அதன் அதிபர், ஆசிரியர்களுக்கும் பேரிழப்பாக இருக்கும் என்பதில் ஐயம் இல்லை. அதுமட்டுமன்றி தமிழ் ஆசிரியர் சங்கத்தின் நீண்டநாள் உறுப்பினராக இருந்து இன்று மாவட்டச் செயலாளராக கடமையாற்றுவதுடன் ஆசிரியர்களின் இடர்பாடுகளை நீக்குவதிலும் அவர்களின் நலன்களை கவனிப்பதிலும் அதிக அக்கறை கொண்டவராக இருந்துள்ளார். இவரை கல்வி உலகம் இழந்து நிற்பது வேதனையே.

இருப்பினும் காலம் உருண்டோடிக் கொண்டிருக்கின்றது. குறிப்பிட்ட வயதில் இளைப்பாற வேண்டியது நியதி. எனினும் இவர் தனது இளைப்பாற்று வயதுக்கு ஓராண்டு காலம் முந்தியே இளைப்பாறிச் செல்கின்றமை பாடசாலை சமூகத்திற்கு மிகுந்த வேதனையைக் கொடுக்கும். இந்த வேளையில் தன்னுடைய எதிர்கால நலன் கருதி இளைப்பாறிச் செல்லும் திரு.நகுலநாதன் அவர்களை, அவரது மனைவி, மக்கள் சகிதம் பல்லாண்டு காலம் சிறப்பாக வாழவேண்டுமென்று வாழ்த்தி இறை ஆசி வேண்டி நிற்கின்றேன்.

இவரை வாழ்த்துவதில் பெருமிதம் அடைகின்றேன்.

**திருமதி.வ.சிவபாலன்**
**ஓய்வுநிலை கோட்டக்கல்விப் பணிப்பாளர்.**
**யாழ்ப்பாணம்.**

## முன்னாள் யாழ் கோட்ட அதிபர் சங்கத் தலைவரின் செய்தி

## தோன்றின் புகழொடு தோன்றுக........



யா/நாவாந்துறை றோமன் கத்தோலிக்க வித்தியாலயத்தில் ஆசிரியராக, பகுதித்தலைவராக பிரதி அதிபராக கால் நூற்றாண்டு வரையில் சிறப்புடன் பணியாற்றி எனது தனது ஓய்வு காலத்திற்கு முன்னதாகவே தனது கல்விப்பணிதனை நிறைவு செய்து ஓய்வு பெற்றுச் செல்லும் திரு.நகுலநாதனின் சேவை நயப்பு மலருக்கான வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமையடைகின்றேன். 01-02-1977ம் ஆண்டில் தனது ஆசிரியப் பணியை யா/மூளாய் சைவப்பிரகாச வித்தியாலயத்தில் ஆரம்பித்த பிரியாவிடை நாயகன் தனது விஞ்ஞானப் பயிற்சியை பலாலி ஆசிரியர் பயிற்சி கலாசாலையில் நிறைவேற்றிய பின் இரத்தினபுரி அல் அக்சா மகாவித்தியாலயத்திலும் பின்னர் யா/ஊர்காவற்துறை புனித அந்தோனியார் கல்லூரியிலும் ஆசிரியப் பணிபுரிந்து இறுதியாக யா/நாவாந்துறை றோ.க.வித்தியாலயத்திற்கு ஆசிரியராக இடமாற்றம் பெற்று வந்து இளைப்பாறும் இக் காலகட்டத்தில் கிட்டத்தட்ட 24 ஆண்டுகளுக்கு மேலாக மேற்படி வித்தியாலயத்தில் படிப்படியாக பல படிநிலைகளைக் கடந்து பிரதி அதிபராகி ஓய்வு பெறுவது ஒருவகையில் மகிழ்ச்சியானதாக இருந்தாலும் பாடசாலையின் வளர்ச்சியையும் அதன் எதிர்கால விருத்தியையும் எண்ணிக் கொண்டால் மறுபக்கத்தில் துயரமானதாகவே உள்ளது. ஒரு அரச சேவையாளன் தனது சேவையை குறிப்பிட்ட ஒரு வயதெல்லையில் நிறுத்திக்கொள்ள வேண்டுமென்பது நிர்வாக கட்டமைப்பு விதியாகும். என்பதால் இளைப்பாறுவதை விரும்பியோ, விரும்பாமலோ, ஏற்றுக் கொண்டேயாக வேண்டும். இதற்கு எங்கள் பிரதி அதிபர் விதிவிலக்கானவராக இருக்க முடியாது.

பிரதி அதிபரவர்கள் அன்பு, கருணை, இரக்கம், புரிந்துணர்வு, நெகிழ்வுப்போக்கு போன்ற மனிதநேயப் பண்புகளைத் தன்னகத்தே இளம் பராயத்திலிருந்து கொண்டிருந்தமையாலும் மேற்படி பாடசாலையானது கிறிஸ்தவ கலாச்சாரப் பண்பாட்டு விழுமியங்களை பிறழ்வில்லாமல் பேணிப் பாதுகாத்து ஆன்மீகத்துடன் கூடிய அறிவியலை வழங்கும் ஆலயமாக விளங்குவதாலும், காலத்துக்குக்காலம் பல பங்கு தந்தையர்களாலும் அருட்தந்தை, அருட்சகோதரிகளாலும் அறிவுரைகளும், போதனைகளும் வழங்கும் சூழலில் ஆசிரியப் பணி ஏற்றமையாலும் அவரது நற்குண நற்செய்கைகள் மேலும் வலுப்பெறக் கூடியதாக இருந்தது என்று கூறினால் மிகையல்ல. பாடசாலையுடன் ஒன்றித்தவராக, அர்ப்பணிப்புடன் கூடியசேவை செய்பவராக விழா நாயகன்

காணப்பட்டமையால் பாடசாலைச் சமூகத்திலே தனக்கென முத்திரை பதித்துக்கொண்டார். பல அதிபர்களுக்கு கீழ் பணியாற்றியமையால் நிர்வாக நுட்பங்களை அனுபவம் மூலம் பெற்று நடைமுறைப்படுத்தி வெற்றி கண்டார். இதனால் கல்வித் திணைக்கள அதிகாரிகள் மட்டத்திலும் அதிபர்கள் மட்டத்திலும், அமைச்சு மட்டத்திலும் நன்மதிப்பு பெற்றவராக எல்லோராலும் விருப்பத்துடன் மதிக்கும் பிரதி அதிபராக விளங்கும் நாயகன் கல்விப்பணியுடன் நின்றுவிடாமல் சமூகப்பணியிலும், சமயப்பணியிலும் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டதால் ஆளுமைமிக்க பல்துறைச் சேவையாளனாக உயர்ந்திருக்கிறார். என்று கூறுவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

நியாயத்திற்காகவே குரல் கொடுக்கும் விழா நாயகன் ஆசிரியர்களின் நலனில் அக்கறையுள்ளவராகவும் அவர்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்காக இலங்கை தமிழர் ஆசிரியர் சங்க மாவட்ட செயலாளராக பணியேற்று தன்பணியை பலரும் பாராட்டத்தக்கவாறு ஆற்றிக்கொண்டிருப்பது அவரின் ஆளுமையுடன் கூடிய தலமைத்துவப் பண்பிற்கு ஒரு எடுத்துக்காட்டாகும். பாடசாலைப் பணியில் சுறுசுறுப்புடையவராகவும், காத்திரமான சிந்தனையுடையவராகவும், நிர்வாகத்திறனுடையவராகவும் காணப்பட்டமையால் மாணவர், ஆசிரியர், மட்டங்களில் நல்லுறவைப்பேணி துருவ நட்சத்திரமாக விளங்கினார். என்று கூறுவது பொருத்தமுடையதாகும். பாடசாலைக்கு முதல் வந்து எல்லோரும் வெளியேறிய பின் இறுதியாக வெளியேறும் நபராக விளங்கிய நாயகன் விடுமுறை காலங்களிலும் சனி, ஞாயிறு தினங்களிலும் கூட பாடசாலையை தரிசிக்காமல் இருந்ததில்லை. தனது சொந்த வேலைகளுக்காக லீவு எடுத்திருந்தாலும் அன்றும் கூட பாடசாலைக்கு வந்துதான் செல்வார். இதை நான் பலமுறை அவதானித்துள்ளேன். இப்படியான கடமையுணர்வுள்ள, பாடசாலையுடன் இரண்டறக்கலந்துவிட்ட சேவையாளரை தற்காலத்தில் காண்பது அரிது. சுயநலம் மிக்க தற்கால சமூகம் இவரை முன்னுதாரணமாகக் கொண்டு செயல்படுத்துவதன் மூலம் தமது சேவைக்கு சிறப்பை ஏற்படுத்த முடியும். பழகுவதற்கு இனிமையானவராக எளிமையான தோற்றம் கொண்டவராக அடக்க முடையவராக, மூத்தோரை மதிக்கும் தன்மை கொண்டவராக விளங்கும் விழா நாயகன் தனது அதிபர்களின் எண்ணங்கள் வண்ணங்களாவதற்கு தன்னாலான பங்களிப்பை வழங்கி அவற்றின் உருவாக்கத்திற்கு பிரதானமாக இருந்து உரமூட்டியவர் இதனால் பதவி வகித்த அதிபர்கள் நிர்வாகத்தை

இலகுவாக முன் கொண்டு சென்றார்கள். என்பதும் அவர்களுக்கு ஏற்படுகின்ற நிர்வாக, சமூக பிரச்சனைகளுக்கு அனுமானமாக இருந்து அவற்றுக்கு தானும் முகம் கொடுத்து அவற்றை தீர்த்து வைத்தார் என்பதும் சமூகமறிந்த உண்மைகளாகும்.

சிறந்த அரச அலுவலர்களுக்கு எங்கே ஓய்வு? ஓய்வின் பின் ஒப்பந்த சேவை அழைக்கும் அல்லது தான்சார்ந்த சமூகசேவை அழைக்கும் அவற்றிலே தன்னை ஈடுபடுத்தி கல்விக்காய், சமூகத்திற்காய் சேவைகள் தொடரவும் குடும்பத்துடன் குதூகலமாகவும் மனம் நிறைவுடனும் வாழ்வும் இறை ஆசி வேண்டுவதுடன் ஓய்வு காலம் பரந்து விரிந்து சிறக்கவும் எனது இதயம் கனிந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

**திரு.நாகலிங்கம் வன்னியசிங்கம்**
B.Sc.(mge) HMO PGDE Marit
M.A.A.T (SRI LANKA)
**ஓய்வு நிலை அதிபர்**
**யா/வைத்தீஸ்வராக் கல்லூரி**



# கிராம சேவகரின் வாழ்த்துச் செய்தி



நாவாந்துறையில் அமைந்த கல்விக்கு வழிகாட்டும் நாவாந்துறை றோமன் கத்தோலிக்க வித்தியாலயத்தில் கடந்த 24 வருடங்களாகவும் மொத்த கல்விச் சேவையில் 36 வருடங்களாகவும் தனது ஆசிரியப் பணியினைச் செவ்வனே செய்த திருவாளர் நல்லையா நகுலநாதன் அவர்கள் கல்வி என்னும் சுடர் நாவாந்துறைப் பகுதி மாணவர்களினைச் சென்றடையத் தன்னையே திரியாகத் தந்தவர். தனது கல்விச் சேவையில் நற்பண்பு நிறைந்த மாணவர்களினை உருவாக்கவும் உறுதுணையாகவும் நின்றவர். தோழமை நிறைந்த அணுகு முறைமூலம் மாணவர்களின் வெற்றிகளில் தன்னையும் இணைத்துக் கொண்டவர். 2103-08-01ந் திகதியுடன் கல்விச் சேவையில் இருந்து ஓய்வு பெறும் ஆசான் அவர்கள் ஓய்வு காலத்தில் தனது குடும்பத்தினருடன் மகிழ்ச்சியாகவும், சமூக சமயப் பணிகளில் தன்னை இணைத்து அனைவரும் போற்ற புகழுடன் வாழ் எல்லாம் வல்ல இறைவனை வேண்டி வாழ்த்துக் கூறுகின்றேன்.

**அ.சர்வேஸ்வரன்**
**கிராம அலுவலர்**
J/85,**நாவாந்துறை வடக்கு**
J/84, **நாவாந்துறை தெற்கு (பதில்)**

முன்னாள் அதிபரின்

# சேவை நயப்பு வாழ்த்துச் செய்தி



ஐம்பத்தொன்பதாவது அகவையில் பணிவோய்வு பெறுகின்ற திரு. நல்லையா நகுலநாதன் அவர்கள் முப்பத்தாறரை ஆண்டுகள் நற்சேவை செய்ததை என் மனதார வாழ்த்துகின்றேன். யா/நாவாந்துறை றோ.க. வித்தியாலயத்தில் 10-10-1988ல் விஞ்ஞான பயிற்றப்பட்ட ஆசிரியராக கடமையேற்றுப் படிப்படியாக அவரது சேவை நலம் காரணமாக பகுதித்த தலைவராக சேவை செய்கையில் என்னுடைய காலம் அவரது சேவையை மேம்படுத்த எண்ணி திணைக்கள உதவியைப் பெற்று பிரதி அதிபர் பதவியைப் பெற்றுக் கொடுத்ததில் பெருமையடைகின்றேன். அதே காலப்பகுதியில் வேறு பல பாடசாலைகளில் அதிபராக செல்லும்படி அகில இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் வற்புறுத்தியும் தான் இதே பாடசாலையில் கடமையாற்ற வேண்டுமெனக் கூறி வித்தியாலயத்தின் ஆக்கத்திற்கும், வளர்ச்சிக்கும் பாடுபட்டு என்னுடனும், எமது ஆசிரிய குழாத்துடனும் நற்பணியாற்றியுள்ளமையை என் மனதார வாழ்த்துகிறேன்.

பொறுப்புள்ள பதவியில் இருந்து முகாமைத்துவப் பொறுப்புக்களை செவ்வையாக செய்ததுடன் மாணவர்களின் தனித்திறமைகளை ஆற்றல்களை வெளிக் கொணரும் பொருட்டும் செயல்பட்டவர். ஒரு நல்ல முன்னோடி ஆசிரியராகவும், நல்ல வழிகாட்டியாகவும் கடமையே கண்ணியமாக சேவையாற்றிய பெருமைக்குரியவர். இது மட்டுமல்ல என்னுடைய காலத்திலும் அதற்கு முன்பும் பின்பும் 24 ஆண்டுகளுக்கு மேல் ஒரே பாடசாலையில் நான்கு அதிபர்களுக்குக் கீழ் பணியாற்றிய பெருமையும் அவரையே சாரும்.

இது மட்டுமல்ல பாடசாலையில் நடைபெறுகின்ற சகல சமயநிகழ்வுகள், போட்டிகள், விழாக்கள் திணைக்களத்தினால் நடாத்தப்படுகின்ற போட்டிகள், ஆசிரியர் சங்கம், பெற்றோர் நலன் விரும்பிகள் சங்கம் முதலியவற்றிலும் அதிபருடனும், ஆசிரிய குழாத்துடனும் இணைந்து வலக்கரமாக உதவி புரியும் பெருமையும அவரையே சாரும்.

மாணவர்கள், பெற்றோர், நலன்விரும்பிகள் முதலியோரிடம் சுமுகமான தொடர்பை ஏற்படுத்துவதிலும் வல்லவர். அவரது சேவையை மென்மேலும் சிறப்புற்று வளரவும் துணைவியார், மகள் கௌசிகா, மகன் லவலோஜன் ஆகியோருடன் சேவை சிறப்புற்று சகல வளங்களும் பெற்று நிறைவுடன் வாழ இறைவன் அருள் பாலிக்க வேண்டுமென் இறைஞ்சி உளமார வாழ்த்துகின்றேன்.

**பணிவோய்வு பெற்ற அதிபர்**
**யே.யேசுதாசன்**

# முன்னாள் அதிபரின் வாழ்த்துச் செய்தி

**கடமை உணர்வும், மனித நேயமும் மிக்க உபஅதிபர்**
**திரு.நல்லையா நகுலநாதன் அவர்கள்**



கடமை உணர்வும், மனிதநேயமும் மிக்க உப அதிபர் திரு.நல்லையா நகுலநாதன் அவர்கள் கல்விப்புலத்தில் 36 வருடங்களாக கல்விப்பணியாற்றி யாழ்/ நாவாந்துறை றோ.க. வித்தியாலயத்தில் 24 வருடங்களுக்கு மேலாக அர்ப்பணிப்புடன் சேவையாற்றி 01-08-2013 அன்று ஓய்வு பெறும் உப அதிபர் திரு.நகுலநாதன் அவர்களுக்கு வாழ்த்துரை வழங்குவதில் பெருமையும், பெருமகிழ்ச்சியுமடைகின்றேன்.

கல்விதான் தமிழ் மக்களின் தலையாய சொத்து, வளங்கள் எதுவுமில்லாத யாழ்/ நாவாந்துறை வித்தியாலயத்தில் கல்விதான் எங்கள் தலைமுறைச் சீதனம். அந்த வகையில் யாழ்/ நாவாந்துறை றோ.க.வித்தியாலயத்தின் கல்வி வளர்ச்சிக்காக 10-10-1988 தொடக்கம் 01-08-2013 வரை ஆசிரியராக, பகுதித்தலைவராக, உபஅதிபராக, முகாமைத்துவக்குழு செயலாளராக பல்வேறு பரிமாணங்களில் பாடசாலையினதும் மாணவர்களினதும் சிறப்பான கல்வி வளர்ச்சிக்கு நிறைவான சேவையாற்றி திரு.நகுலநாதன் அவர்கள் ஓய்வு பெறவுள்ளார். இவ்வேளையில் அவரது அர்ப்பணிப்பான சேவையினை நன்றியுடன் நினைவுறுகின்றோம்.

திரு.நகுலநாதன் உப அதிபர் அவர்கள் தம்மிடம் ஒப்படைக்கப்பட்ட பொறுப்புக்களை எதிர் பார்த்ததை விட சிறப்பாகச் செய்து முடிக்கும் ஆற்றலுடையவர். பாடசாலை முகாமைத்துவம், பாடசாலை விளையாட்டுப்போட்டிகள், பாடசாலை பரிசளிப்பு விழாக்கள், இல்ல மெய்வன்மைப் போட்டிகள் மற்றும் பாடசாலை இணைப்பாடவிதான செயற்பாடுகள் அனைத்திலும் முன்னின்று செயற்பட்டு உழைத்தவர்.

திரு.நகுலநாதன் அவர்களுடன் நான் யாழ்/ நாவாந்துறை றோ.க. வித்தியாலயத்தில் அதிபராகக் கடமையாற்றிய காலத்திலிருந்து இன்று வரை மிகவும் நெருக்கமாகவும் அன்புடனும் பழகி வருகின்றோம். திரு.நகுலநாதன்

அவர்கள் அதிபர், ஆசிரியர்களுடனும், மாணவர்களுடனும் பெற்றோர்களுடனும் நல்லுறவைப் பேணுவதில் வல்லவர் எமது பாடசாலை மாணவர்கள் அறிவு மிக்கவர்களாகவும் ஒழுக்க சீலர்களாகவும் உருவாக்க வேண்டுமென்பதில் நம்பிக்கை கொண்டவர் அதற்காக தன்னலம் பாராது உழைத்தவர் அதில் ஓரளவு வெற்றியும் கண்டுள்ளார். யாழ் மாவட்டத்தில் அசாதாரண சூழ்நிலை நிலவிய காலகட்டத்தில் இடம் பெயர்வுகள் மத்தியிலும் எமது பாடசாலைச் செயற்பாடுகள் சோர்வடையாது முன்னெடுத்துச் செல்வதில் என்னுடன் இணைந்து செயற்பட்டவர். குடும்ப உறவுகள் என்ற இறுக்கமான கட்டுப்பாடுகளுக்கப்பால் நின்று கல்விப்பணியை இறைபணியாகக் கருதி செயற்பட்ட ஒரு பெருந்தகை.

கல்வியும், ஆரோக்கியமும் ஒரு சமூகத்தின் இரு கண்கள் சுவர் இருந்தாற்றான் சித்திரம் வரையலாம் அந்த வகையில் மாணவர்களுக்கு மதிய உணவு வழங்கும் பொறுப்பேற்று மாணவர் மதிய உணவுப் போஷாக்குத்திட்டத்தினை திறம்பட நடத்தி செயற்பட்டவர். இவ்வேளை அதிபருக்கும், பாடசாலை சமூகத்திற்கும் வழங்கிய நற்சேவையினை நன்றியுடன் நினைவு கூறுகின்றோம்.

திரு.நகுலநாதன் உப அதிபர் அவர்கள் கல்விச் சேவையுடன் பொதுச்சேவையாக தமிழர் ஆசிரியர் சங்கத்துடன் தன்னை இணைத்துக் கொண்டு யாழ் மாவட்ட செயலாளராக பல வருடங்கள் நற் சேவையாற்றியுள்ளார். மாணவர்கள் சிறந்த கல்வியைப் பெறவேண்டுமாயின் ஆசிரியர்களின் பிரச்சனைகள் தீர்க்கப்படவேண்டுமென்பதில் அசையாத நம்பிக்கையுடையவர். ஆசிரியர்களின் பிரச்சனைகளை இனங்கண்டு கல்வித் திணைக்கள அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு அதற்கான பரிகாரங்களைச் செய்வதில் கடமையுணர்வு மிக்க உபஅதிபராகவும், மனித நேயமிக்க பண்பாளராகவும், மாணவர்கள், ஆசிரியர்கள் மத்தியில் அர்ப்பணிப்புடன் கல்விப்பணியாற்றி மனநிறைவுடன் ஓய்வு பெறும் திரு.நகுலநாதன் அவர்களின் கல்விப்பணி எமது வித்தியாலயத்திற்கு மட்டுமன்றி கல்விச் சமூகத்திற்கும் பேரிழப்பாகும்.

இவரது ஓய்வுகாலம் மகிழ்ச்சிகரமாக அமைய வேண்டுமெனவும் குடும்ப உறவுடனும், சுகதேகியாக பல்லாண்டு வாழ்ந்து மனநிறைவு பெற வேண்டுமெனவும் இவரது வாழ்வுப்பயணத்தில் இறைவன் தாமே கூடவே பயணிக்கவும் வேண்டுமெனவும் இறையாசி வேண்டி வாழ்த்துகின்றேன்.

**திரு.கவிரியேல்பிள்ளை செபஸ்தியாம்பிள்ளை**
**ஓய்வு நிலை அதிபர்**
**யா/நாவாந்துறை றோ.க.வித்தியாலயம்**
**முன்னாள் யாழ் மாவட்ட சாரணர் ஆணையாளர்**
**யாழ்ப்பாணம்.**

முன்னாள் அதிபர் சார்பாக

**திரு.நல்லையா நகுலநாதன்**

## நாவாந்துறை றோ.க.வித்தியாலய வரலாற்றில் என்றும் நிலையான தூண்



10-10-1988ல் எமது பாடசாலை வரலாற்றில் இனிமையான நாள் பழகுவதற்கு இனிமையும், பேச்சில் திறமையும், செயலில் வீரருமான எம் அன்புக்கினிய நல்லையா நகுலநாதன் எம் பாடசாலை குழுமத்தில் ஒன்றித்த நாள். அன்று தொட்டு இன்றுவரை (01-08-2013) சுமார் 25 ஆண்டுகளாக பாடசாலையின் பல்வேறு வளர்ச்சி நிலைகளிலும் வியர்வை சிந்தி, தோளோடு தோள் கொடுத்து கிடைத்த வெற்றிகளை ஆர்ப்பரிப்பின்றி அமைதியாக அனுபவித்த இந்த உத்தம வீரனுக்கு முன்னாள் அதிபர் சு.மலக்கியாஸ் அவர்கள் குடும்பம் சார்பில் வாழ்த்துக்களை தெரிவிக்கின்றேன்.

அமரர் சு.மலக்கியஸ் அவர்கள் இங்கு அதிபராகப் பணியாற்றிய காலத்தில் திரு.ந.நகுலநாதன் அவர்களின் ஆளுமை, ஆற்றல், அறிவு ஆகியவற்றை மெச்சி பல்வேறு கடமைப் பொறுப்புக்களை கையளித்துள்ளார். இணைப்பாடவிதான செயற்பாடுகள், நிர்வாக செயற்பாடுகள் பௌதீக கட்டுமாண நடவடிக்கைகள் யாவற்றிலும் அமரர். மலக்கியாஸ் அவர்களின் முதற் தெரிவு திரு.நகுலநாதன் அவர்களே. தன்னிடம் ஒப்படைத்த பணிகளை முழுநிறைவோடு ஆற்றி அமரர். மலக்கியாஸ் அவர்களின் கனவுகள், எதிர்பார்ப்புக்களுக்கு உயிரூட்டியவர் திரு.நகுலநாதன் அவர்கள் தான். பாடசாலை கருமங்களில் மட்டுமன்றி எம் குடும்ப நிகழ்வுகளையும் தன் பங்களிப்பால் அவர் அலங்கரித்துள்ளார். இதற்காக எம் குடும்பம் சார்பான நன்றிதனை நவில்கின்றேன்.

திரு.நகுலநாதன் அவர்கள் தமிழர் ஆசிரியர் சங்க மாவட்ட செயலாளராக இருந்து தமிழ் ஆசிரிய சமூகத்திற்கும் அளப்பரிய பணியாற்றியுள்ளார். இன, மத, மொழி பேதங்களுக்கு அப்பால் மானிட நேயத்தை கடைப்பிடித்த பண்பாளன் திரு.நகுலநாதன் அவர்களை வாழ்க பல்லாண்டு, வாழ்க வளமோடு என்று ஆயராம் புனித.நீக்கிலாரின் பரிந்துரை வழியாக எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கின்றேன்.

**திரு.இ.பெ.அகிலநாயகம்**
**அதிபர் அமரர் சு.மலக்கியாஸ்**
**குடும்ப உறவுகள் சார்பாக**



# சகோதர பாடசாலை அதிபரின் வாழ்த்துச் செய்தி

## நிறைவான சேவை



உலகத்திலே எவன் ஒருவன் தன் வாழ்விலே நிறைவைக் காண்கின்றானோ அவனே மனிதன் என்ற மாண்பினைப் பெறுகின்றான். மனிதனாகப் பிறக்கின்றவன் வாழ்க்கையை இரசனையோடு ரம்மியமான வகையிலே வாழ்ந்து தனக்குள்ளே திருப்தியைக் காண வேண்டியவனாகின்றான். அவன் தான் மனிதன். தனக்கென ஒப்படைக்கப்பட்ட கருமங்களை எவன் ஒருவன் மிகவும் மகிழ்வோடு ஏற்று செவ்வனே செய்து முடிக்கின்றானோ அவனே தனது சேவையில் திருப்தி காண்கின்றான். அவன்தான் சேவையாளன்.

யாழ்ப்பாணம் நாவாந்துறை றோமன் கத்தோலிக்க தமிழ் வித்தியாலயம் தன்னுடன் நீண்டகாலம் உறவாட வேண்டும் என்ற வகையிலே உயிர்த்துடிப்புள்ள ஓர் ஆளுமை வீரனை தன் சிறகுக்குள் அரவணைத்து பாரெல்லாம் ஒளிவீசும் வகையில் பற்பல சாதனைகளை படைத்திருந்தது. இத்தகைய ஒரு பண்பாளன், சாதனையாளன், ஆளுமைவீரன், நல்லாசான், சேவையாளன் இவர்தான் திருவாளர் நல்லையா நகுலநாதன் அவர்கள் திருவாளர் நகுலநாதன் அவர்கள் இந்தப்பாடசாலையில் ஆசிரியராக, பகுதித்தலைவராக கடமையாற்றி எல்லாவற்றிகும் மகுடம் வைத்தாற்போல் 14 ஆண்டுகள் பிரதி அதிபராகக் கடமையாற்றி இருக்கின்றார்.

திருவாளர் நகுலநாதன் அவர்கள் எல்லோருடனும் மிகவும் அன்பாகப் பழகுகின்ற இனியசுபாவம் கொண்ட ஒரு பண்பாளன். மாணவர்களுடன் அன்பாகப் பழகி அவர்களை அறிவாளிகளாக்கிய பெருமை இவருக்குண்டு. ஆசிரியர்களை அன்புடன் அணுகி அமைதியான முறையிலே கல்விச் செயற்பாடுகளை கச்சிதமாக நிறைவேற்றும் முழுமையாளன். நிர்வாக விடயங்களிலே அதிபருடன் தோளோடு தோள் நின்று உதவும் நல்ல ஒரு செயல்வீரனாக தொழிற்பட்டவர். பாடசாலையிலே நடைபெறுகின்ற ஒவ்வொரு நிகழ்வுகளிலும் தன்னை முழுமையாக அர்ப்பணித்து சேவையாற்றியிருக்கின்றார். உருவத்திலே சிறியவர் உள்ளத்திலே பெரியவர். சேவையிலே மேன்மையாளன். மற்றவர்களுடன் பழகுவதில் மனிதநேயன். அயற்பாடசாலை அதிபர்களுடனும், ஆசிரியர்களுடனும், மிகவும் அன்புறவோடு உறவாடி தன் பாடசாலையின் பெருமையை பாதுகாத்தவர்

திருவாளர் நல்லையா நகுலநாதன் அவர்கள் உள்ளத்திலே பலமானவர். தன் சேவையிலே பலமானவர். திட்டமிட்டு தீர்மானம் எடுத்து நடைமுறைப்படுத்துவதில் மிகப்பலம் வாய்ந்தவர். தன் பலமான சேவையினாலே பாடசாலையைப் பலமாக வைத்திருந்தார். இதனாலே பாடசாலை பெருமையடைந்தது. பாடசாலையின் நற்புகழினால் நகுலநாதன் அவர்கள் பெருமையடைந்தார். திருவாளர் நல்லையா நகுலநாதன் அவர்கள் தனது ஐம்பத்தொன்பதாவது அகவையில் நாவாந்துறை றோ.க.த.க பாடசாலையிலிருந்தும் பணி ஓய்வு பெறுகின்றார். எனினும் அவரது ஆலோசனைகளையும் அறிவுரைகளையும் அன்னையவள் தொடர்ந்தும் பெற்றுக்கொண்டேயிருப்பாள் சேவையிலே நிறைவு கண்ட திருவாளர் நல்லையா நகுலநாதன் அவர்களது ஓய்வு காலம் சீரும் சிறப்புமாக அமைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டிக் கொள்கின்றேன்

**ப.கணேசன்**
**அதிபர்,**
**யா/கொட்டடி, நமசிவாய வித்தியாலயம்**
**யாழ்ப்பாணம்.**



# ஆசிரியர் நலன்புரி கழகத்தின் வாழ்த்துச் செய்தி




எமது வித்தியாலயத்தின் பிரதி அதிபராக அரும் பணியாற்றி இன்றைய தினம் பணி ஓய்வு பெறும் எனது பெருமதிப்பிற்கும் பேரன்பிற்குமுரிய உயர் திரு.நல்லையா நகுலநாதன் அவர்களின் சேவை நயப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெரும் உவகையுறுகின்றேன். தனது சேவையின் 36 வருடங்களில் எமது பாடசாலையில் கடந்த 24 வருடங்களுக்கு மேலாக அர்ப்ப ணிப்பான சேவையை நல்கிய எம் பிரதி அதிபர் அவர்கள் எமது பாடசாலையில் ஆசிரியராகவும், பகுதி தலைவராகவும், பணி நிறைவேற்று அதிபராகவும், கடமையாற்றினார். இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத்தின் யாழ்மாவட்ட கௌரவ செயலாளராகவும் சகல ஆசிரியருக்கும் சேவை நல்கியதோடு ஆசிரியர்களின் நலன்களுக்காக தன்னையே அர்ப்பணிப்புச் செய்த தொழிற்சங்கவாதியாவார்.

எமது ஆசிரியர் நலன்புரிக் கழகத்தின் சிரேஸ்ட அங்கத்தவரான அவர் நலன்புரிக் கழகத்தின் காப்பாளராக எம் சகல முன்னெடுப்புக்களிலும் தன்னை முழுமையாக ஈடுபடுத்தி எமக்கு வழிகாட்டியவர். நிர்வாக மேலாளராகவும், சிறந்த முகாமைத்துவ தலைவராகவும், பேச்சு ஆற்றலால் மற்றவர்களை தம்பக்கம் ஈர்க்கும் அற்புத ஆற்றல் உடையவராகவும். வாத பிரதிவாதங்களின் மூலம் சிறந்த தீர்ப்பை வழங்கும் நீதியாளராகவும் அன்புடனும் பண்புடனும் எம்முடன் சேவையாற்றி எமது வித்தியாலயத்தின் வரலாற்றின் பக்கங்களில் நீங்காத ஒரு இடத்தை பெற்றுள்ளார். எங்கள் பிரதி அதிபர் பணியிலிருந்து ஓய்வு பெற்றாலும் அவர் அன்பும் வழிகாட்டலும் என்றும் எம்முடனிருக்கும் என்று உறுதியாக நம்புகின்றேன். அவரின் ஓய்வு காலத்தில் அவர் தம் குடும்பத்துடன் நிறைவான செல்வங்களைப் பெற்று வாழ இறைஅருள் வேண்டுவதோடு வாழ்வும் நலனும் என்றும் சிறக்க சக ஆசிரியர்களோடு இணைந்து வாழ்த்துகின்றேன்.

**திரு.க.சுகுந்தன்**
**தலைவர் ஆசிரியர் நலன்புரிக் கழகம்.**
**யா/ நாவாந்துறை றோ.க.வித்தியாலயம்**

**யா/நாவாந்துறை றோ.க.த வித்தியாலயமதில் அதிபராக இருந்து ஓய்வு பெறும் உயர்திரு.ந.நகுலநாதன் அவர்கள் ஓய்வு பெறும் வேளை பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினரால் வாழ்த்தி வழங்கும் செய்தி**

அன்புள்ளம் அரவணைக்கும்
அன்னை உள்ளம்
புன்சிரிப்பு பூத்தமுகம்
புகளெதுவும் விரும்பா உள்ளம்
கண்ணியம் கடமை நேர்மை
கருத்தினில் கொண்டு என்றும்
தன்பணி தப்பாது செய்த
தகமைசேர் பிரதி அதிபர்
ஓய்வு நாள் எதுவு மின்றி
ஒழுங்காக கடமை ஆற்றி
ஊர் மக்கள் ஆசிரியர் எல்லாம்
உவப்புடன் புகழ்ந்து போற்ற
ஆண்டுகள் இருபத் தைந்து
அனைவரும் வியந்து போற்ற
நம்மவர் பள்ளி தன்னில்
நகுலநாதனார் கல்வி ஊட்டி
கால் நூற்றாண்டை இங்கு
கழித்த நல் மேலாய் வாழி!
ஓய்வதும் எடுத்துச் சென்று
ஒப்பரும் குடும்பத்தோடு
சீர் பெற வாழ்வமைத்து
சிறந்து நூறாண்டு வாழ்க
கல்வியை ஊட்டி னோர்க்கு
கடவுளின் ஆசி கிட்டும்
உயர் நிலை வாழ்வு கிட்டும்
ஒப்பரும் மறுவாழ்வும் எய்தி
சீர் பெற சிறப்புக்களோடு
செல்வ நற்குழந்தைகளோடும்
மாண்புறு மனைவியோடும்
மன நிறைவு எய்தி வாழ்க.



.அ.எல்பேட்தாசன்
அபிவிருத்திச் சங்க செயலாளர்



## முன்னாள் பகுதித் தலைவரின் வாழ்த்து

## எங்கள் நகுல்

ங்கள் நகுல்............

அமைதியின் உறைவு
ஆற்றலின் பிறப்பு
உள்ளத்தில் உயர்வு
உதட்டினில் சிரிப்பு
மாறாத வாக்கு
மாசில்லா போக்கு
எண்ணத்தின் மேன்மை
இயம்பிடும் தூய்மை
ஆசிரிய சேவையில்
அர்ப்பணிப்பு வாழ்க்கை
அல்லும் பகலும்
அயராத சேவை
நேர முகாமைத்துவம்
நிதானம் கண்ணியம்
ஒழுங்கு கட்டுப்பாடு
தவறாத வாண்மை
முகாமைத்துவம் உயர்
தகைமையின் சேர்க்கை
தலைமைத்துவம் இவர்
வாழ்வினில் இயற்கை
விஞ்ஞானம் கற்பித்தலில்
அதி உயர் வாண்மை
மெஞ்ஞானதேடலில்
விளங்கிடும் மேன்மை

அன்புடன் சிறாரை
அணைத்திடும் பாங்கு
ஆசிரிய சோதரர்க்கு
வழிகாட்டும் மனப்பாங்கு
இன்பத்தில் துன்பத்தில்
இணைந்திடும் தன்மை
எத்துயர் வரினும்
தாங்கிடும் திண்மை
உதவிகள் புரிவதில்
அறவழி நடப்பு
இடுக்கண் களைவதில்
குறள்வழி நட்பு
பதவியில் பெருமை
பணிந்திடும் எளிமை
பல்திறன் காட்டிடும்
ஆளுமை புதுமை

வாழ்வாங்கு வாழ்ந்திடும்
எங்கள் நகுலின்
வாழ்வு சிறக்க
வாழ்த்துகின்றேன் வாயார
மனைவி மக்களுடன்
மனை சிறக்க வாழியென
பரம்பொருள் அருள்கூடி
பல்லாண்டு வாழியவே!

**நட்புடன்**

**கௌரி.கணேசலிங்கம்**
**ஓய்வுநிலை பகுதித் தலைவர்**
**யா/ நாவாந்துறை றோ.க. வித்தியாலயம்**

# வாழ்க வளமுடன் என்றும்



யா/நாவாந்துறை றோ.க.வித்தியாலயத்தின் ஆசிரியராக, பகுதித்தலைவராக, பிரதி அதிபராகக் கடந்த 24 ஆண்டுகள் பணியாற்றி வித்தியாலயத்தினதும் அது சார்ந்த சமூகத்தினதும் மேம்பாட்டிற்காக அர்ப்பணிப்புடன் உழைத்த எமது வித்தியாலய பிரதி அதிபர் திரு.நல்லையா நகுலநாதன் அவர்களது சேவை நயப்பு மலருக்கான வாழ்த்துச் செய்தியை வழங்குவதில் மகிழ்வடைகின்றேன். ஆளுமை நிறைந்த அமைதியான இனிய சுபாவமும், குறிப்பறிந்து செயலாற்றும் திறனும், எதையும் சீர்தூக்கிப் பார்த்தறியும் நுண்ணறிவும், அனைவரையும் அரவணைத்து வழிப்படுத்தும் நற்பண்பும், சவால்களை எதிர்கொள்ளும் மனப்பக்குவமும், நிர்வாகத்தெளிவும், விவேகமும் பிரதி அதிபரிடம் நான் கண்ட தனித்துவமான பண்புகள். இந்துவாக இருந்தாலும் கிறீஸ்தவ வணக்க வழிபாடுகளில் அதீத ஈடுபாடு கொண்டவர். இந்துப் பாடசாலைகளில் அதிபராகப் பதவியேற்கக் கிடைத்த வாய்ப்புக்களையெல்லாம் புறந்தள்ளி இவ்வித்தியாலயத்தின் மீது கொண்ட ஈடுபாடு காரணமாக ஏறக்குறைய கால்நூற்றாண்டு காலம் தமது சேவையை எமது சமூகத்துக்கு நல்கியுள்ளார். அவரது பெருந்தன்மையைப் பாடசாலையும், சமூகமும் எப்போதும் நன்றியுடன் நினைவு கூரும்.

எதிர்காலப்பணியை முன்னிட்டு கல்விப்புலத்திலிருந்து பணி ஓய்வு பெறும் பிரதி அதிபரையும், குடும்பத்தினரையும் சகல வளங்களும், நல்லாரோக்கியமும் பெற்று இன்புடன் நீண்டகாலம் இனிதே வாழ இறையாசி வேண்டி வாழ்த்துகின்றேன்.

**செல்வி. லூசியா றஞ்சினி சூசைப்பிள்ளை**
**பகுதித்தலைவர்**
**சிரேஷ்ட இடைநிலைப்பிரிவு**
**யா/நாவாந்துறை றோ.க.வித்தியாலயம்**

# நகுலநாதன் என்றோர் நல்லாசான்



நாவாந்துறை தனிலே நகுலநாதன் என்றோர் நல்லாசான்
பாங்காய் கல்விப்பனி பணிவுடன் ஏற்று நின்றார்
ஓங்கும் நற்சேவையினால் உயர்வுகள் தான் பெற்றார்
தாங்கிடும் பதவியிலே பிரதி அதிபராய் மேவி நின்றார்

ஆற்றல் மிகவுடையோர் – நல் ஆளுமை தான் கொண்டார்
போற்றும் திறன் மிக்கவர் – பொறை பேணும் தகவுடையார்
காற்றினைப் போல நம் கல்விச்சாலையில் நிறைந்துள்ளார்
ஏற்றிப் புகழ்வதற்கே ஏற்ற வார்த்தைகள் தேடுகின்றோம்

அனுபவமுதிர்ச்சியினால் ஆற்றும் கருமங்கள் சிறப்படையும்
அணுகிடும் முறையதிலே தனித்துவம் நிறைந்திருக்கும்
ஆற்றிடும் சேவையிலே ஆர்ப்பணம் நிறைந்திருக்கும்
சாற்றுவோம் புகழ்மாலை சான்றோர் என அவர்க்கே

கடமையில் விசுவாசம் காலந்தவறிடா மனப்பாங்கு
சமரசமேலாண்மை சகித்திடும் உளப்பாங்கு
உடையதோர் நாவாண்மை உறவுகள் பேணிடுமே
விடையது பெற்றாலும் விளம்புவோம் உம் புகழை

இறைவனின் ஆசியுடன் இகமதில் வாழ்ந்து நல்ல
உடலுள நலனோடு உலாவரவேண்டுமென்றும்
வளமது நிறைந்திடவே வாழ்த்துவோம் வாயார
வாழிய பல்லாண்டு என்றும் வாழிய வாழியவே


**திருமதி.கோ.கருணானந்தன்**
**பகுதித்தலைவர்**
**கனிஷ்ட இடைநிலைப்பிரிவு**
**யா/நாவாந்துறை றோ.க.வித்தியாலயம்**

## ஆரம்ப பிரிவு பகுதித்தலைவரின் வாழ்த்துரை



"செய்யும் தொழிலே தெய்வம்"என்ற பொன் மொழிக்கிணங்க திரு.நல்லையா நகுலநாதன் அவர்கள் தம் பணியைச் சிரமேற்கொண்டு நல் ஆசானாக, நல்லதோர் பிரதி அதிபராக உயிரோட்டமுள்ள செயற்பாடுகளை மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும், பாடசாலைச் சமூகத்தினருக்கும் ஆற்றியுள்ளார். நேரம் தவறாமை, நேர்த்தியான வேலைப்பாடு, ஆசிரிய நண்பர்களுடன் அன்புடன் பழகும் சுபாவம் இவற்றையெல்லாம் தம்மகத்தே கொண்ட எம் பிரதி அதிபர் முப்பத்தாறு வருடகால பணியை நிறுத்தி ஓய்வினைப் பெறுகின்றார். இவர் தம் ஓய்வு காலம் சிறப்பாக அமையவும், நோய் நொடியின்றி குடும்பத்தாருடன் நீடூழிகாலம் வாழவும் எல்லாம் வல்ல பரம் பொருளை வேண்டி நிற்கின்றேன்.

**திருமதி.ப.தயாபரநாதன்**
**பகுதித்தலைவர்**
**ஆரம்பப் பிரிவு**

---

## அபிவிருத்திக்குழு பொருளாளரின் வாழ்த்துரை

திரு.நகுலநாதன் ஆசிரியர் அவர்கள் 1995ம் ஆண்டு எனது தாயாரின் பேரில் புலமைப் பரிசில் திட்டத்தை எமது பாடசாலையில் ஆரம்பிக்கும் பொழுது அதற்கு முழு ஒத்துழைப்பும் ஆதரவும் தந்து உதவினார் பாடசாலையின் வளர்ச்சி மற்றும் தேவைகள் பற்றி என்னுடன் மிகவும் பொறுப்புடனும் ஆர்வத்துடனும் பகிர்ந்து கொள்வார். எமது பாடசாலையின் வளர்ச்சியில் அதிக அக்கறை காட்டி மாணவர்களை நலிவழியிலும் கல்வியில் சிறந்தவர்களாகவும் ஆக்கும் பணியில் அயராது பாடுபட்டார். அவர் பாடசாலையிலிருந்து ஓய்வு பெற்றாலும் கல்வியில் அவர் கொண்ட அக்கறை மற்றும் சமூகப்பணிகள் இன்னும் பல ஆண்டுகள் தொடரும் என்பதில் எனக்கு அசையாத நம்பிக்கை உண்டு.

**இ.மொன்மொலின் ஜெறாட்**
LLB (London)
**பொருளாளர்**
**சென்.மேரிஸ் சர்வதேச அபிவிருத்திக்குழு**

# வாழ்த்துச் செய்தி



திரு.நல்லையா நகுலநாதன் நாவாந்துறை றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் வித்தியாலயத்தில் 10-10-1988ம் ஆண்டு ஆசிரியராகக் கடமையேற்றார். இவர் பாடசாலையில் இணைந்த நாள் முதல் எல்லோருடைய மனதிலும் இடம் பிடித்துக் கொண்டார். இவர் பாடசாலையில் நடைபெறும் எந்தச் செயற்பாடாக இருந்தாலும் மிகத் துரிதமாகத் தனது பணியைச் செவ்வனே செய்து முடிக்கக்கூடிய வல்லவராக இருந்தார்.

பாடசாலையில் இணைந்த காலம் தொட்டு இவருடன் பணியாற்றிய அதிபர்கள் பலர் இவர்களில் திரு மலாக்கியாஸ் என்ற அதிபருடன் இணைந்து மிக வேகமாகச் செயற்பட்டு வந்தார். இவரது காலங்களில் நாவந்துறை சமூகத்தில் எல்லோருடன் அன்பாகப் பழகி தனது பணியினை ஆற்றினார்.

இவர் பணியாற்றிய பாடசாலைகளில் அதிக காலங்கள் பணியாற்றிய பாடசாலை நாவாந்துறை றோ.க.த.க. வித்தியாலயமும் ஆகும். இது எமது பாடசாலைக்குப் பெருமையைத் தேடித்தந்துள்ளது.

எமது பாடசாலையில் பணியாற்றிக் கொண்டிருக்கும் போது இவருக்கு பகுதித்தலைவர் பதவி கிடைக்கப் பெற்றார். (26-07-1994) இவர் பிரதி அதிபராக. 10-02-1999 தொடக்கம் 08-01-2013 வரை பணியாற்றினார். வருடா வருடம் நடைபெறும் சகல விதமான விழாக்கள் போட்டிகளில் (இல்ல மெய்வல்லுனர்) பெரும் பங்காற்றினார். ஒவ்வொரு நாளும் நேர காலத்துடன் பாசாலை வந்து புனித நீக்கிலார். ஆலயத்தை வணங்கி தன் கருமத்தை ஆரம்பிக்கும் அவரின் பண்பைக் கண்டு வியந்துள்ளேன்.தான் பணியாற்றிய சமூக சூழலுடன் தன்னையும் அவர் அடையாளப்படுத்தியதாகவே நான் இதை உணர்கின்றேன்.

**பெ.யேக்கப்**
**மாநகரசபை உறுப்பினர், யாழ்ப்பாணம்**
**பாடசாலை அபிவித்திச் சங்கம்**
**முன்னைநாள் செயலாளர்**

# ஒரு தாய்ப் பறவை ஒன்று ஓய்வு பெறுகின்றது.



ஒரு கூட்டில் பல குஞ்சுகளுக்கு கல்வி என்னும் இரையூட்டி வளர்த்து அக் குஞ்சுகளுக்கு அதன் பருவ காலம் வர ஆசி கூறி அனுப்பி வைத்த தாய்ப்பறவை தன் சேவையை ஒடுக்கி இன்று ஓய்வு பெறுகின்றது. புகழ் பூத்த நாவாய் மண்ணில் தன் சேவையை தொடர்ச்சியாக 24 வருடங்களுக்கு மேலாக செய்த ஆசிரியபணி நகுலநாதன் அவர்கள் தன்னால் முடிந்த சேவையை செய்த நிம்மதியோடு ஐயா ஓய்வு பெறுகின்றார். வேறு வழி தெரியாமல் நெஞ்சடைக்கும் கவலையோடு யாழ் நாவாந்துறை மக்களாகிய நாம் ஐயாவின் பாதங்களை வணங்கி விடை கொடுக்கின்றோம். அவர் எங்கிருந்தாலும் சீரோடும் சிறப்போடும் வாழ சென். நீக்கிலாறை பிரார்த்திக்கின்றோம்.

வாழ்க அவர்!

வளர்க ஐயாவின் புகழ்!

**கி.தர்மரட்ணம்**
**நல்லூர் பிரதேசசபை உறுப்பினர்**

# மனிதருள் மாணிக்கம்

தன் வாழ்நாளில் கால் நூற்றாண்டுகளை நாவாந்துறைப் பிரதேச கல்வி மேம்பாட்டிற்காக அர்ப்பணித்த மதிப்பிற்குரிய பிரதி அதிபர் திரு.நல்லையா நகுலநாதன் அவர்களை நன்றியுணர்வுடன் வாழ்த்துகின்றேன். பிரதி அதிபர் அவர்கள் தன் பிள்ளைகள் போல் எம் பிள்ளைகளை நேசித்தவர். மருத நிலத்தில் பிறந்தாலும் நெய்தல் நில மக்களின் வாழ்வியலைப் புரிந்து உணர்வுபூர்வமாகப் பணியாற்றிவயர். எம் பிரதேசத்தின் இரு தலைமுறைகள் அவரிடம் கல்வி பயின்றுள்ளமை அவரின் வரலாற்றுச் சாதனையாகும்.

இப்பாடசாலையின் நலன் விரும்பியாக அவரோடு இணைந்து பணியாற்றக் கிடைத்த சந்தர்ப்பத்தை பெரும் பேறாகக் கருதுகின்றேன் அவர் எம் பிரதேசத்திற்கு இறைவன் அளித்த பெரும் கொடை. அவரது முன்மாதிரியான வாழ்வு ஒவ்வொரு மனிதரின் வாழ்விற்கும் நல் எடுத்துக்காட்டு. பணிவோய்வு பெறும் இத்தருணத்தில் திரு.நகுலநாதன் அவர்களை நல்ஆரோக்கியத்துடன் நீடு வாழ எம் அன்னை கடல் உணவு நிறுவனத்தின் சார்பில் வாழ்த்துகின்றேன்.



திரு.செ.யோண்மேரி
அன்னை கடலுணவு நிறுவனம்
நாவாந்துறை



# பணிக்கால ஓய்வு பெறும் ஆசிரியர் நகுலநாதன் அவர்கட்கு நாவாந்துறை புனித மரியாள் நலன்புரிச் சங்கத்தின் வாழ்த்துச்செய்தி



தலைசிறந்த பணிகளில் ஆசிரியர் பணியும் ஒன்றாக இருக்கின்றது. இந்த உயரிய பணியிலே மன நிறைவு காணும் நகுலநாதன் ஆசான் வாழ்த்துக்குரியவரே. இவர் தனது பணியிலே சந்தித்த ஒவ்வொரு மாணவனையும் கல்வி எனும் உளியால் செதுக்கி அழகிய சிற்பங்களாகக் கண்டு மகிழ்ந்தவர். சிறப்பாக தனது ஆசிரியப் பணியின் பெரும் பகுதியினை எமது பாடசாலையிலே நிறைவு செய்தவர். இக்கால கட்டத்திலே மிகவும் பொறுமையுடனும் தியாகசிந்தையுடனும் ஒவ்வொரு மாணாக்கனினதும் அறிவுப் பசியைப் போக்கியவ. இவர்களில் பலரை சமூகத்தின் புத்தி ஜீவிகளாக, சமூக சேவையாளர்களாக கண்டும் பெருமிதம் அடைந்திருக்கின்றார். எனவே தனது தன்னலமில்லா சேவையின் மூலம் எமது பிள்ளைகளை, கிராமத்தை வளர்ச்சியின் பாதையிலே இட்டுச் சென்ற எமது ஆசிரியரை வாழ்த்துவதில் பெருமிதம் அடைகின்றேன். இவர் தனது பணியிலிருந்து ஓய்வு பெற்றாலும் இவரது மாணாக்கரின் பணி என்றும் ஓயாது எமது சமூகத்தை வளப்படுத்தும் என்பதில் எதுவிதமான ஐயமும் இல்லை. எனவே எம் ஆசிரியரை இதுவரை காத்து வழிநடத்திய எல்லாம் வல்ல இறைவன் தொடர்ந்தும் இவரை எல்லாவிதமான ஆசீரால் நிறைத்து காத்திட பிரார்த்தனை செய்வதோடு மனமார வாழ்த்தி நிற்கின்றேன்.

**அ.செபமாலை**
**தலைவர்**
**சென்மேரிஸ் நலன்புரிச்சங்கம்**

## திரு.நல்லையா நகுலநாதன்
## பிரதி அதிபர், யாழ்- நாவாந்துறை
## றோ.க.வித்தியாலயம் - அவர்களின்
## சேவைநயப்பு மலருக்கான
## வாழ்த்துச் செய்தி



அன்பிற்கும், பண்பிற்கும் இலக்கணமாய்த் திகழ்ந்தீர்! ஆசிரியப் பணிதனில்

மற்றையோர்க்கு எடுத்துக் காட்டாய்த் திகழ்ந்தீர்!

இன்முக மலர்வுடன் இனிதிங்கு சேவைதனைப் புரிந்தீர்!

ஈர்பத்து நான்கு ஆண்டுகளாய் இங்கு நீண்ட பணி புரிந்தீர்!

உளமாரச் சேவைதனை மனதார இங்கு செய்தீர்!

ஊரார் குழாம் உம் சேவைதனை போற்றச் செய்தீர்!

எண்ணும் எழுத்தும் இருகண் எனக் கருதி நீவிர்!

ஐயா! நீர் எம் மக்கள் மனங்கவர்ந்து நிறைந்து நின்றீர்!

ஒரு பொழுதும் எம் மக்கள் மனம் கோணாது நின்றீர்!

ஓர்போதும் நின் சேவைதனை நாம் மறவோம்!

ஔடதமாய் கல்விதனை மாணவர்க்கு ஊட்டியதை நாம் மறவோம்!

இ∴தெல்லாம் நினைத்தும்மை நீடூழி வாழ்கவெனப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

**-வாழ்த்துபவர்-**
**சிங்கராஜர் செலஸ்ரீன்**
**முன்னாள் செயலாளர்**
**பாடசாலை அபிவிருத்திச் சங்கம்**

# நல்லாசான் வாழ்க

கல்வியெனும் கடலினிலே ஆழ்ந்துநல்ல முத்தெடுத்து
நல்லறிவாய் மாணவர்க்கு ஆர்வமுடன் தான் கொடுத்து
வல்லபணி தான்முடித்து எம்நகுல நாதனவன்
செல்லுகின்ற நாளிதிலே வாழ்த்துகிறோம் வாழ்க!

அன்புக்கு இலக்கணமாய் நின்றுழைத்த நல்லோன்
பண்புக்கும் பணிவுக்கும் சிறந்தவொரு வல்லோன்
எண்ணுக்கும் எழுத்துக்கும் உயிர்கொடுத்த சொல்லோன்
எண்ணத்துள் எந்நாளும் நிறைந்திருக்கும் செயலோன்!

மாணவரின் கல்வியதே கடமையெனக் கொண்டு
பேணியவர் குறைகளைந்து மனமகிழ்ந்து நின்று
ஏணியென அவருயரத் தனையுருக்கு கின்ற
காணரிய ஆசிரியப் பெருந்தகையே வாழ்க!

யாழ் தமிழர் ஆசிரியர் சங்கமதில் நல்ல
தாழ்மையுறு மாவட்டச் செயலரென ஆகி
ஆளுமையும் அனுபவமும் தான்மிகவே பெற்று
ஏழுலகும் தான் புகழப் பணிபுரிந்தோன் வாழ்க!

அறிவூட்டும் விஞ்ஞான ஆசானாய் மண்ணில்
திறத்தோடு பலகல்விச் சாலைகளில் நல்ல
அறமூட்டும் சிறப்பாலே காணபவரின் நெஞ்சில்
நிறைந்தோங்கி வாழ்பவனே காலமெல்லாம் வாழ்க!

ஆண்டவனின் பேரருளும் அவர்தூய அரவணைப்பும்
ஆயுளெல்லாம் உடனிருந்து ஆனசுக நலவளங்கள்
ஓய்வுநிலை வாழ்வினிலும் நிறைவுடனே தருகவென
ஒன்றிணைந்து நாவாயூர் வாழ்ந்திடுதே வாழ்க!

**தொம்மை அருள்ராசா**
**(அண்ணாவியார்)**



## வாழ்த்துகின்றோம் போற்றுகின்றோம்

தோன்றில் புகழோடு தோன்றுக அஃதிலார் தோன்றில் தோன்றாமை நன்று" - குறள

எமது யாழ்/ நாவாந்துறை றோ.க.வித்தியாலயத்தின் பிரதி அதிபர் உயர் திரு.நல்லையா நகுலநாதன் அவர்களின் சேவை நயப்பு மலருக்கான வாழ்த்துச் செய்தியை சென்.நீக்கிலஸ் சனசமூக நிலையத்தின் சார்பாக அளிப்பதில் பெரு மகிழ்ச்சி கொள்கின்றோம்.

காரைநகரைப் பிறப்பிடமாகக் கொண்ட ஆசிரியர் அவர்கள் யாழ்/மூளாய் சைவப்பிரகாச வித்தியாலயத்தில் 01-02------1977 முதல் ஆசிரிய பணியை ஏற்றார். 01-01-1980 முதல் 31-12-1982 வரை பலாலி ஆசிரியர் கலாசாலையில் ஆசிரிய பயிற்சி பெற்றார். யாழ்/ஊர்காவற்துறை சென்.அன்ரனீஸ் கல்லூரி ஆகியவற்றில் 01-01-1983 தொடங்கி 09-10-1988 வரை ஆசிரியப் பணியை மிகத் திறம்படச் செய்துள்ளார்.

எமது பாடசாலையில் 10-10-1988ல் பயிற்றப்பட்ட விஞ்ஞான ஆசிரியராகப் பணியைப் பொறுப்பேற்றார். இவர் பதவி ஏற்ற போது நாட்டில் அசாதாரண சூழ்நிலை நிலவிய காலமாகும். அதாவது இந்திய அமைதிப்படையின் கெடுபிடிகள் நிலவிய நேரம் ஆகும். அக்காலத்தில் தன் ஆசிரிய பணியை செவ்வனே செய்து வந்தார். தொடர்ந்து பகுதித் தலைவராக, பிரதி அதிபராக தனது சேவையை திறம்படச் செய்துள்ளார்.

எமது மாணவச் செல்வங்களின் கல்வி வளர்ச்சியிலும், கலை கலாச்சார வளர்ச்சியிலும், விளையாட்டு வளர்ச்சியிலும் ஊக்கம் செலுத்தி முன்னேற துணைபுரிந்தார். இவர் பாடசாலை அபிவிருத்திச்சங்க உறுப்பினர்களுடனும், கிராம மக்களுடனும் மிக நெருக்கமான உறவைப் பேணி வந்தார். இலங்கை ஆசிரியர் சேவை (S.L.T.S) -1 தரத்தில் முன்னேறினார். இத்தரத்தினால் அதிபர் பதவியும் வகிக்கக்கூடியவராய் இருந்தார். யாழ் மாவட்ட தமிழர் ஆசிரிய சங்க செயலாளராகவும் பணியாற்றியதும் குறிப்பிடத்தக்கது.

24 வருடங்கள் எமது வித்தியாலயத்தில் ஆசிரியராக, பகுதித்தலைவராக, பிரதி அதிபராக இருந்து 01-08-2013 அன்று சுய விருப்பின் போரில் ஓய்வு பெறுகின்றார். இவரின் ஓய்வு காலம் அவரது குடும்பத்தினரோடு ஒன்றித்து, நோய் நொடி அற்று நீண்ட ஆயுளுடன் வாழ எமது காவலராம் புனித நீக்கிலாரை வேண்டி நிற்கின்றறோம்.



**திரு.நீ.பிலிப் (வாசு)**
**தலைவர் சென்.நீக்கிலஸ் சனசமூகநிலையம்**
**தலைவர், சென்.நீக்கிலஸ் கடற்றொழிலாளர் சங்கம்**
**நாவாந்துறை**

# சென் மேரீஸ் நிலையத் தலைவரின் வாழ்த்துச் செய்தி

கல்விப்பணி ஓர் இறைபணி 'எழுத்தறிவித்தவன் இறைவன்' என்ற வாக்கிற்கேற்ப தனது கல்விப்பணியை இருபத்து நான்கு வருடங்களுக்கு மேலாக எம் நாவாய் மண்ணிலாற்றி பணிவோய்வு பெறும் ஆசிரியர் திரு.நல்லையா நகுலநாதன் அவர்களை நன்றியோடு வாழ்த்துவதில் பெருமகிழ்வு அடைகின்றேன்.

யா/நாவாந்துறை றோ.க. வித்தியாலயத்தில் 10-10-1988-- இல் இருந்து 01-08-2013 வரை கல்விப்பணியாற்றிய ஆசிரியர் அவர்கள் பகுதித் தலைவராகவும், பிரதி அதிபராகவும் பணியாற்றினார். என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. தனது பணிக்காலத்தில் மாணவர் ஒவ்வொருவரையும் நன்கறிந்து செயல்பட்டவர் என்றால் அது மிகையாகாது. உலகுக்கு திரு.நல்லையா நகுலநாதன் அவர்கள் தனது பணிக்காலத்தில் சிறப்பாகச் செய்துள்ளார். என்பது உண்மை.

மாணவர்களின் பிரச்சனைகளுக்குள்ளே அவர்களோடு ஒருவராக நின்று அவர்களின் கல்வியில் அவர்களோடு பயணிப்பவர்தான் எங்கள் பிரதி அதிபர். நேரம் தவறாதவர். கடமையில் கண்ணியமானவர். ஒவ்வொரு மாணவரின் திறமைகளையும் அறிந்து செயற்படுபவர்.

எம் கிராமத்து சமயசமூக நிகழ்வுகளில் பங்கேற்று நம்மையெல்லாம் உற்சாகப்படுத்தி மகிழ்விப்பவர். நம்மவர் உள்ளம் கவர்ந்த நல்லாசான் எம் ஆசிரியர். அவருக்கு என் உளம் கனிந்த நன்றிகளையும் வாழ்த்துக்களையும் சென் மேரீஸ் சனசமூக நிலையத்தின் சார்பில் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.



**திரு.தி.மால்கன்**
**தலைவர்**
**சென்மேரீஸ் சனசமூக நிலையம்**
**நாவாந்துறை**
**யாழ்ப்பாணம்.**

# ஓய்வற்ற கல்விப்பணி ஓய்வு பெறுக



நல்லதொரு மாணவ சமூகத்தை உருவாக்கும் அரும் பணியில் தன்னை இணைக்க நெய்தல் மண்ணில் 10-10-1988ல் முதன் முறையாக அறிமுகமான நல்லையா நகுலநாதன் என்னும் பெயர் கொண்ட ஆசிரியர் நாவாந்துறை றோ.க.த.க. பாடசாலையில் பணியை ஆரம்பித்து அங்கு 10 வருடங்கள் ஆசிரியராகவும் 14 வருடங்கள் பிரதி அதிபராகவும் கடமையாற்றிய காலங்களில் மாணவர் மேல் கொண்ட அக்கறையின் பேரில் கல்வி புகட்டி பல வெற்றி பெற்ற மாணவர்களையும் கண்டு பல துறைகளிலும் பாடசாலைக்கு புகழ்சேர்த்த நல்லதொரு ஆசான். கல்வித்துறையிலிருந்து ஓய்வு பெறும் இவர் கரையோர மக்களின் இன்ப துன்பங்களில் பங்கு கொண்ட ஒரு பணியாளர். மென்மையான உள்ளம் படைத்த வள்ளல். தொடரும் காலங்களில் இவர் எல்லா அருள் வளங்களும் பெற்று வாழ நெய்தல் நில மக்கள் வாழ்த்துகின்றனர். காலநேரம் பாராது பாடசாலைப் பணியே தன் உயிர் மூச்சு என்ற தாரக மந்திரத்தை தன் இதயத்தில் ஏற்றி அர்ப்பணிப்புடன் சேவையாற்றிய நல்லதொரு மாணவ சமூகத்தை உருவாக்கிய உங்கள் தியாகத்தை உங்களால் உயர்வு பெற்ற மாணவ சமூகம் என்றும் மறவாது பாடசாலையோடு நின்றுவிடாது கத்தோலிக்க மக்களோடு ஒன்றிணைந்து ஆற்றிய சேவைகள் எம் மக்கள் என்றும் மறவார்கள். தங்களை என்றும் பல புகழ்பெற நெய்தல் மக்களோடு நானும் வளம் பெற வாழ்த்துகின்றேன்.

**-என்றும் அன்புடன்-**

**போ.சிறியானந்தம் (சகாயசீலன்)**

**புனித மரியாள் கூ.சங்க தலைவர்**

**யாழ் சமாச சங்க பொருளாளர்**

**நாவாந்துறை, யாழ்ப்பாணம்.**

## சேவைதனை வாழ்த்திடும் வாழ்த்துச் செய்தி.

நாவாந்துறை மண்ணில் தன் உழைப்பையும் சிந்தனையையும் செயற்றிறனையும் விதைத்து நற்சமூகமொன்ற கட்யெழுப்பும் ஆவலுடன் செயற்பட்ட பெருந்தொகையோரில் எமது பாடசாலை பிரதி அதிபர் திருநல்லையா நகுலநாதன் அவர்கள் முதன்மையானவர், மூலவேரானவர் என்று கூறுவதில் தயக்கமேதுமில்லை அவர் இம் மண்ணிற்கும் எம் பாடசாலைக்கும் ஆற்றிய சேவை அளப்பெரியது.

ஒரு பேராசானாக மதிக்கத்தக்க பிரதி அதிபர் திரு.ந.நகுலநாதன் அவர்கள் ஒரு பயிற்றப்பட்ட விஞ்ஞான ஆசிரியர். நல்லாசிரியருக்குரிய அத்தனை இலக்கணங்களையும் தன்னகத்தே கொண்டவர். சிறந்த பன்முக ஆளுமை கொண்ட பண்பாளன். அவரை எம் நாவாந்துறை சமூகம் பெற்றுக்கொண்டது. மாபெரும் பேறு என்றுதான் கூறவேண்டும். தான் கற்ற கல்வியையும் பெற்ற அனுபவங்களையும் எந்தளவுக்கு வழங்கமுடியுமோ அந்தளவுக்கு வழங்கியவர். எல்லோரையும் சிறந்த கல்விமான்களாக்க வேண்டும் என்பதில் அவர் அயராது பாடுபட்டார். அதற்காக பாடசாலையில் பாடவேளைகளுக்கு ஆசிரியர் வருகைதராத வகுப்பறைகளை கூட தாமே சென்று தரிசித்து அந்தந்த பாடங்களை கற்பித்தார். அது மட்டுமன்றி பரீட்சைக் காலங்களில் பாடசாலை நேரம் தவிர்ந்த ஏனைய நேரங்களில் பிரத்தியேகமாக மெல்லக்கற்கும் மாணவர்களுக்கும் விசேட வகுப்புக்களை எடுத்தும் தன்னாலான முயற்சிகளைச் செய்தார்.

கல்வியில் மட்டுமன்றி கலைத்துறை விளையாட்டுத்துறை ஆகியவற்றிலும் அதிக அக்கறை காட்டியவர் விளையாட்டுப் போட்டிகளுக்கு மாணவர்களை தயார் செய்வதிலும், உற்சாகம் காட்டுவதிலும், போட்டிகளை நடத்தி முடிப்பதில் அதிக அக்கறை காட்டுபவர் நம் பிரதி அதிபர். எமது மண்ணிற்கும் பாடசாலைக்கும் பல வெற்றிகளை தந்துள்ளார். என்பது மகிழ்ச்சிக்குரியது. திரு.ந.நகுலநாதன் அவர்கள் நம்மை விட்டுப்பிரிந்து சென்றாலும் நாவாந்துறையின் ஒவ்வொரு குடிமகனின் மனதிலும் அவர் ஆற்றிய சேவையின் சிறப்பு பதியப்பட்டு அவரை முன்னுதாரணமாகக் காட்டி எமது மாணவர்களை கல்வி அறிவில் வளர்த்தெடுக்க வேண்டும். அப்போது தான் நாம் அவருக்கு நன்றியை செலுத்தியவர்களாவோம்.

எம் ஆசானின் சேவைதனை வாழ்த்தி
நன்றியுடன் தலைவணங்கி நிற்கின்றேன்.



**சென். நீக்கிலஸ் இளைஞர் மன்ற**
**தலைவர்**
**திரு. பத்திநாதர் இராஜேஸ்வரன்**
**(செல்டன்)**

# நல் ஆசான்

கற்றோனுக்கு சென்ற இடமெல்லாம் சிறப்பென்பார்கள் இதற்கு அமைவாக எமது நாவாந்துறை றோ.க.வித்தியாலயத்திற்கு 10-10-1988ல் முதல் முறையாக கால் தடம் பதித்த நகுலநாதன் ஆசிரியர் அவர்கள் கல்விப் பணியை சிறப்பாக ஆற்றினார். அவர் கற்பிக்கும் முறை, மாணவர்கள் மேல் கொண்டுள்ள பற்று எல்லோரையும் கவர்ந்துள்ளது. கல்வியோடு நின்றுவிடாது விளையாட்டுக்கள், கலை கலாச்சார, மேம்பாடுகளிலும் அளப்பெரிய ஆர்வம் காட்டினார். சக ஆசிரியர்களோடு பண்பாகவும், மதித்து நடக்கக் கூடிய பக்குவமான ஆசிரியராகவும் இருந்தார். இவர் இந்து மதத்தை சார்ந்தவரென்றாலும் ஏனைய மதங்களையும் மதித்து நடக்கக்கூடியவர். அவருடைய கல்விப் பணிவாழ்வு எமது கல்வி சமூகத்திற்கு என்றென்றைக்கும் குன்றின்மேல் விளக்காக பிரகாசித்துக் கொண்டே இருக்கும்.

எமது பாடசாலையில் 24 வருடங்கள் கல்விப்பணி வாழ்வை முடித்தவர் அதிலும் 14 வருடங்கள் பிரதி அதிபராக கடமையாற்றியுள்ளார். கடமை,கண்ணியம், கட்டுப்பாட்டோடு மாணவர்களை வழிநடத்தும் மென்மை உள்ளம் படைத்த ஆசானாகத் திகழ்ந்தார். நாவாய் கல்வி சமூகமும் கல்வி பணிவாழ்விலிருந்து ஓய்வு பெறும் ஆசானை இன்னும் பல நன்மதிப்புக்களையும் பெறுவீர்கள் என வாழ்த்துகின்றது. நானும் சமூகத்துடன் இணைந்து நெஞ்சார வளம் பெற வாழ்த்தி பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றேன்.



**ப. இந்திரன் (றைற்றஸ்)**
**செயலாளர்**
**சென்மேரீஸ் நலன்புரி சங்கம்**
**நாவாந்துறை**

# அறிவுக் கடல்

இயற்கை வளம் நிறைந்த ஊராம் காரைநகரில் நல்லையா தம்பதியினரின் மகனாக 30-05-1954இல் அவனியில் உதித்து, காரைநகர் தியாகராஜா இந்துக் கல்லூரியில் பயின்று, ஆசிரியராய் திகழ்ந்த இவர் சைவம், இஸ்லாம், கிறிஸ்தவப் பாடசாலைகளில் சேவைகள் பல செய்து இலங்கைத் தீவின் முடியெனத் திகழும் யாழ்ப்பாணத்தின் மேற்குப் பகுதியில் அமைந்த கலை வளம் கொண்ட ஊராம் நாவாந்துறை றோமன் கத்தோலிக்க வித்தியாலயத்தில் 1988ஆம் ஆண்டு முதல் இன்று வரை 25 ஆண்டுகள் பணியாற்றிய பிரியாவிடையின் நாயகன். அறிவுக் கடலின் அறிவுத் தேடல்.

இவ் வித்தியாலய மாணவர்களின் உள்ளார்ந்த உணர்வுகளை இனங்கண்டு சிறந்த முறையில் மாணவர்கள் கற்றல் அடிப்படைத் தேர்ச்சிகளில் சிறப்புத் தேர்ச்சி பெற்று ஆளுமை பெற்ற மாணவர்களாக உயரிய நிலை அடைய வேண்டுமென்று உழைத்த ஒரு பெருந்தகை.

மேலும் ஒரு சமூகத்தின் வளர்ச்சியையும், மாற்றத்தையும் உந்துகின்ற ஒரு காரணியாய் கல்வி அமைகின்றது. சமூகத்தின் பண்பாட்டையும் பொருளாதாரத்தையும் வளப்படுத்துகின்ற ஆற்றல் கல்விக்கு உண்டு இதனாலேயே ஒரு சமூகத்தின் உண்மையான செல்வம் "கல்வி" எனப்படுகின்றது. இத்தகைய கல்வியை சமூகத்திற்கு வழங்குகின்ற பொறுப்பை ஏற்று பாடசாலை வளர்ச்சியில் தம்மை இணைத்து இன்று பணி ஓய்வு பெறும் ஆசிரியர் திரு.நல்லையா நகுலநாதன் அவர்களை பாடசாலை சமூகத்தின் சார்பிலும், பழைய மாணவர்கள் சார்பிலும் வாழ்த்துகின்றோம்.



**அ.லிகோரி**
**பாடசாலை அபிவிருத்திச்சங்க**
**உறுப்பினர்.**

## திரு.நல்லையா நகுலநாதன்

## உங்கள் நினைவலைகள் எம்மை விட்டு அகலாது.

காரைநகர்ப் பகுதியிலே வைகாசி மாதத்திலே 30ம் திகதியிலே மண் மீது கால் பதித்த எம் புத்திரனே! எம் ஆசான். சின்னஞ்சிறு வயதினிலே தய்,தந்தை அன்பைப் பெற்று அரவணைப்புடன் வெற்றி வாகை சூடியவனே! எம் ஆசான் குழந்தைப் பருவமதில் கல்வியை இலக்காகக் கொண்டு கலாநிதி தியாகராஜா இந்துக் கல்லூதனிலே கல்வி பயின்றவனே எம் ஆசான். பலகலைகள் கற்றாலும், மனித மாண்புகளை கலசமாக அணிந்து சிறந்ததொரு ஆசானாக உருவெடுத்தவனே! நம் ஆசான். பலதேசம் சென்று, பல மனிதர்களை சந்தித்து, பல கல்லூரிகளிலும், வித்தியாலயங்களிலும் அறிவு புகட்டியவனே! எம் ஆசான். சமுதாயத்தில், குடும்பத்தில், பாடசாலையில் சிறந்த மனிதனாக பணியாளனாக, நற்குருவாக, பெரியவராக, தந்தையாக வாழ்ந்து காட்டிய எம் பெருமானே! எம் ஆசான்.

தம் சேவை மட்டும் அல்ல உலக சேவை எனக் கூறி மாவட்டச் செயலாளர், தமிழர் ஆசிரியச் சங்கம், யாழ் மாவட்டம் எங்கும் தம்புகழ் பரப்பிட உழைத்த எம் உத்தமனே! எம் ஆசான். மனைவி வசந்தாவை வசந்தமாகவும் தம் பிள்ளைச் செல்வங்கள் இருவருக்கும் செல்வங்கள் அனைத்தும் அளித்து வழி நடத்தும் பகலவனே எம் ஆசான். சுற்றங்கள் சூழ, உறவுகள் வாழ்த்த, மனிதர்கள் மதிக்க, தம்முடன் நற்பண்புகளை வளர்த்து நல் மானிடனாக வாழ்பவனே! எம் ஆசான். எத்தனை வருடங்கள் வாழ்வதோ, சேவை புரிவதோ முக்கியமல்ல எப்படி வாழ்வது என்பது தான் சிறப்பு, அப்படிப்பட்ட சிறப்புக்கு முற்றுப்புள்ளி வைத்தவனே எம் ஆசான். வாமும் காலமதில் சேவை புரிந்த காலங்களில் மாணவர்கள் ஆசிரிர்களை பண்பாக, பாசமாக, நேர்மையாக விசுவாசமாக, நம்பிக்கையுடன் நல்வழிப்படுத்தியவனே! எம் ஆசான்.

மாசி மாதம் 1ம் திகதி ஆயிரத்து தொள்ளாயிரத்து எழுபத்து ஏழில் நியமனம் பெற்று ஐந்து பாடசாலைகளில் பணியாற்றி 36 வருடம் தம் சேவையை இனிதே நிறைவேற்றி எம் பாடசாலையை விட்டு பிரிய இருக்கும் எம் ஆசானை வாழ்த்தி நீண்ட ஆயுளுடன் நீண்டகாலம் வாழ்க என வாழ்த்தி நிற்கின்றோம்.

வாழ்க நீர், வளர்க உம் சேவை

**திருமதி.செ.கில்டா (பபா)**
**பாடசாலை அபிவிருத்திச்சங்கம்**
**உறுப்பினர்.**

# ஆசிரியர்களின் வாழ்த்துச் செய்திகள்



காரையில் பிறந்து 24 ஆண்டுகள் கல்விச்சேவையில் திறம்பட உயர்ந்து சமூகத்தில் எல்லையில்லா நன்மதிப்பை பெற்று புன்னகைத்த இன்முகம் கொண்டவரே வாழி

**திருமதி.பா.பரமேஸ்வரி**
**(ஆசிரியை)**





பணிவு, அடக்கம், புன்னகைக்கும் இன்முகம் அணியாய்
கொண்ட எம் பிரதி அதிபரே!
24 ஆண்டுகள் சேவையினைப் பூர்த்தி செய்து ஓய்வு பெறும் நின் பணிக்காக வாழ்த்துகின்றேன்.

**திரு.N. சிவராஜ்**
**(ஆசிரியர்)**



அன்பின் பிறப்பிடமாய் - அறிவின் சிகரமாய்
பொறுமையின் சாகரமாய் - பொறுப்பில் கலங்கரை விளக்காய்
கருணையில் தெய்வமாய் - கடமையில் கண்ணியமாய்
ஜொலிக்கும் எம் பிரதி அதிபரே நீடூழி வாழ்க பல்லாண்டு பல்லாண்டு

**திருமதி.விஜிதா பரம்தில்லைராஜன்**
**(ஆசிரியை)**



அன்பின் முதலிடமாய், அமைதியின் உறைவிடமாய் ஆற்றலில் பொக்கிஷமாய், சேவையில் வசிப்பிடமாய் திகழ்ந்த எங்கள் உப அதிபரை ஓய்வு பெறும் இவ்வேளை பல்லாண்டு காலம் வாழ்கவென மனதார வாழ்த்துகின்றேன்.

**திருமதி.செ.கருணதாஸ்**
**(ஆசிரியை)**



இனிமை, எளிமை, அன்பு, கடமை உணர்வு கொண்ட இனிய பணியாளராம் எமது உப அதிபரை என்றும் எல்லா நலனும் பெற்று ஏற்றமுடன் வாழ வாழ்த்துகின்றேன்.

**திருமதி. யசோதரா விக்னேஸ்வரமூர்த்தி**
**(ஆசிரியை)**



மலை போல் சவால்கள் வந்தாலும்
மடுவாக கருதும் உம் மனப்பாங்கும்
எதையும் துணிந்து செய்யும் ஆற்றலும்
என் கல்விப்பணிக்கு மேல்வரி சட்டம்

**திருமதி.சுதர்சினி கரன்சன்**
**(ஆசிரியை)**



அன்பிற்கும், மதிப்பிற்குமுரிய எமது வித்தியாலய பிரதி அதிபர் அவர்கள் எமது வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் பெரிதும் வழி காட்டியாகஇருந்தார். இந்த நாளிலே அவரை மனதார வாழ்த்துவதோடு அவரது வாழ்க்கை சிறக்க இறைவனை வேண்டுகிறேன்.

**திருமதி.வ.தயாபரன்**
**(சங்கீத ஆசிரியை)**



நான் பார்த்த உப அதிபர்களில்
எனக்குப் பிடித்த உப அதிபர்,
வெள்ளி விழா நாயகன், பொன் விழாவையும்
கொண்டாட வாழ்த்துகின்றேன்.

**திருமதி.ந.வசந்தரூபன்**
**(ஆசிரியை)**



அறிவு, ஆற்றல், இளமைத்துடிப்பு, ஈடிணையற்ற சேவை, உண்மை, ஊக்கம், எளிமை, ஏற்றமிகு நல்வாழ்வு இத்தனையும் தன்னகத்தே தாங்கி நிற்கும் எம் உப அதிபர் அவர்கள் தம் ஓய்வு காலமதில் சீருடனும் சிறப்புடனும் வாழ இறைவன் துணை புரிவாராக.

**திருமதி.ச. இளங்கோ**
**(ஆசிரியை)**



பிறர் மனம் அறிந்து
அவர் வழி ஒழுகும்
பிரதி அதிபரே நீடூழி வாழ்க

**திருமதி.கா.காந்தன்**
**(ஆசிரியை)**



மணிவிழாக் காணும்
மாண்பு மிகு நாயகனே
வாழிய நீர் பல்லாண்டு
வளமுடனே வாழியவே,

**திருமதி.அனித்தா ஆறுமுகம்**
**(ஆசிரியை)**



"கடமை, கண்ணியம், கட்டுப்பாடு நேரமுகாமைத்துவத்தை அணிகலனாகக் கொண்ட எம் பிரதி அதிபரே நலமுடன் வாழ்க"

**திருமதி.மஞ்சுளாதேவி பிறேமதேவா**
**(ஆசிரியை)**



தனது கடமையை முழு விருப்புடன் செய்து அதன் மூலம் மனநிறைவும், மகிழ்ச்சியும் பெற்று நல்லவராயும், வல்லவராயும் விளங்கும் எங்கள் பிரதி அதிபரை மனதார வாழ்த்துகின்றேன்.

**திருமதி.திரிபுராம்பாள் ருத்திரலிங்கம்**
**(ஆசிரியை)**



பணியினிலே வெள்ளிவிழாவை எம்
வித்தியாலயத்தில் எதிர்பார்த்தவரே
அகவையிலே மணிவிழாவை மகிழ்வுடன்
எதிர்கொள்ள இருப்பவரே
வாழ்வினிலே நூற்றாண்டு விழாவும்
நீங்கள் காண வாழ்த்துகின்றேன்

**திருமதி.கி.மே.ப.டேமியன்**
**(ஆசிரியை)**



Made a succesful Educational Service since 1988 till today at navanthurai R.C. Vidyalayam. He has to be congratulated for his impartial administration in respect of cast. creed and Religion.

God may bless a healthy and long life during his retirement

**S.Gobalakrishnan**
**(Teacher)**

---



கருத்தினில் ஆழமும்
கடமையில் நேர்த்தியும்
காலத்தில் வேகமுமாய்
செயற்பட்டு வழிகாட்டிய
பிரதி அதிபரே வாழ்க
வளமுடன் பல்லாண்டு

**திருமதி.சி.பிரேமகுமாரி**
**(ஆசிரியை)**

---



விஞ்ஞானக் கல்வியினை விந்தையுடன் புகட்ட வந்து பல்ஞானம் புகட்டி பலர் மனதிலும் இடம் பிடித்த வல்லானாம் எம் பிரதி அதிபர் நீர் வாழ்க நீடூழிகாலம்

**திருமதி.சு.பாலசரஸ்வதி**
**(ஆசிரியை)**

---



மதிப்புக்குரிய உப அதிபர் அவர்களே!
"உங்களிற்கு மட்டும் ஓய்வுகாலம் - ஆனால்
உங்கள் சேவைக்கு ஓய்வில்லை"
நீங்கள் நீடூழி காலம் வாழ்க

**திருமதி.செல்வரதி சிவநாதன்**
**(ஆசிரியை)**

---

மதிப்பிற்குரிய உபஅதிபர் அவர்களே!

பூக்கள் எல்லாம் விரிந்து நறுமணம் வீசுவது போல உங்கள் வார்த்தைகளில் கல்வி என்னும் அறிவு மணம் பரப்பி நீங்கள் நீடூழி காலம் வாழ்க.

**திருமதி.ஜெ.துரைராசா**
**(ஆசிரியை)**



புன்னகை மன்னனாய்!
புண்ணிய சீலனாய்!
பூரித்த மனத்துடன்
சேவைதனை புரிந்து
ஓய்வு பெறும் பிரதி அதிபரே,
வாழ்க பல்லாண்டு

**திருமதி.சா.அன்ரனி அருள்தாசன்**
**(ஆசிரியை)**

---

புது முகம் எம்மை
பூரித்த முகத்துடன்
இனிதே வரவேற்று
இடமளித்த ஆசானே!
நீங்கள் வாழ்க வளமுடன்

**திருமதி.ஜெ.இராத்தினகோபால்**
**(ஆசிரியை)**

---



சீரான கற்பித்தல் செயற்பாட்டை
செம்மையுடன் செயற்படுத்த
வழிகாட்டியான ஆசானே!
உம் வழியில் நான் ஆசானாக வர
உறுதுணையாய் நின்ற பிரதி அதிபரே!
நீங்கள் சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றேன்

**செல்வி.மாலினி மாட்டின்**
**(ஆசிரியை)**

---



“கல்விச் செயற்பாட்டை
கருத்துடனே முன்னெடுத்து
அலுவலகச் செயற்பாட்டை
ஆர்வமுடன் சீர்ப்படுத்தி
ஆற்றலுடன் செயற்பட்ட
பிரதி அதிபரே!
வாழ்க நீடூழி!

**திருமதி.கே.கணேசலிங்கம்**
**(ஆசிரியை)**



உள்ளச் சோர்வின்றி துடிப்புடன் செயற்பட்டு சிறுவர் உள்ளங்களில் அதிபராய் உயர்ந்த பிரதி அதிபரே வாழ்க வளமுடன்

**திருமதி.ரெ.மேரி கலிஸ்ரா**
**(ஆசிரியை)**



நான் கற்கும் போது கண்டேன் நல் விஞ்ஞான ஆசானாய்
நான் கற்பிக்கும் போது கண்டேன் பிரதி அதிபர் எனும் சேவையாளனாய்
நான் வளர ஆசி கூறி வழி நடத்தும் என் ஆசானே
நீ வாழ இறையடி பணிந்து உன் வழி தொடர்வேன் நல் ஆசானாய்

**திரு.க. உதயகுமார்**
**(ஆசிரியர் - மாணவன்)**



புரியாததை புரிய வைக்க - புலவர் ஆகின்றாய்
தவறு செய்யும் போது அதை தட்டிக் கேட்டு - தந்தை ஆகின்றாய்
தோல்வியடையும் போது தட்டிக் கொடுக்கையில் - தோழன் ஆகின்றாய்
வெற்றியடைந்திருந்தால் அதை வாழ்த்துவதில் அன்னை ஆகின்றாய்
மொத்தத்தில் நீங்கள் எங்கள் வாழ்க்கையின் வழிகாட்டி ஆகின்றாய்

**க.மகேஸ்வரன்**
**(ஆசிரியர்)**

Our Deputy principal Mr.Nallaiah Nagulanathan is a man of word and deed. The way he deal any parblem reaveled his experience.

I wish him a happy healthy and properous retired life.

**M.Seralagan**
**Teacher**



அன்பால் அனைவர் உள்ளங்களையும் வென்ற எம் பிரதி அதிபரே! 24 ஆண்டுகள் சேவையினை நிறைவு செய்து பல செல்வங்களையும் பெற்று நீடூழி வாழ வாழ்த்துகின்றேன்.

**திருமதி.சாந்தினிதேவி ஜெராட்**
**(ஆசிரியை)**



எமது பாடசாலையில் 24 வருடங்களுக்கு மேலாக அர்ப்பணிப்புடன் தன் சேவையை வழங்கி 59வது வயதில் ஓய்வு பெறும் எம் வித்தியாலய பிரதி அதிபரின் கீழ் 6 வருடங்களாகப் பணியாற்றியுள்ளேன். அவருடன் சேவையாற்றியதில் பல விடயங்களை கற்றுள்ளேன். அவர் சிறந்த பண்பாளனும் சிறந்த ஆசானும், அத்துடன் ஒவ்வொருவரின் இயல்புகளை அறிந்து அவர்களுக் கேற்றாற் போல் பழகக் கூடியவர். கோபம் என்பதை அவர் முகத்தில் ஒரு போதும் கண்டதில்லை. எந்த பிரச்சனையையும் சுமுகமாக தீர்க்கும் திறன் அவரிடம் உண்டு. அவரது ஓய்வு எம் வித்தியாலயத்திற்கே வலது கரத்தை இழந்தது போல் உள்ளது. எனினும் அவர் தன சுய விருப்பின் பெயரில் ஓய்வு பெறுகின்றார். இவ்வேளையில் அவரின் வாழ்வும், அவர் முன்னெடுக்கும் காரியங்களும் சிறப்புற அமையவும், தனது குடும்பத்துடன் முன்னெடுக்கும் காரியங்களும் சிறப்புற அமையவும், தனது குடும்பத்துடன் பல்லாண்டு காலம் இனிதே வாழவும் வாழ்த்தி நிற்கின்றேன்.

**திருமதி. றெ.ஞா.மரியதாஸ்**
**(ஆசிரியை)**

---



ஆசான்களுக்கு முன்னுதாரணமாய்
நம் கல்விச்சாலையின் உயிர்நாடியாய்
தன்னை கல்வி புலத்திற்கு ஈர்ந்த
பிரதிஅதிபரே வாழ்க வளமுடன் - நலமுடன் பல்லாண்டு

**திரு. சி.சிவலோகநாதன்**
**(ஆசிரியர்)**

---



இருப்பினைப் பாடசாலையில் நிலைநிறுத்தி, சுயவிருப்பின் பேரில் பணிவோய்வு பெறும் எமது எமது பாடசாலையில் 24 வருடங்களுக்கு மேலாக அர்ப்பணிப்பான சேவையினை நல்கி தனது பிரதி அதிபர் திரு.நல்லையா நகுலநாதன் அவர்களின் ஓய்வு காலம் மகிழ்ச்சிகரமானதாக அமைவதுடன் அவரும் அவர் தம் குடும்ப அங்கத்தவர்களும் எல்லாச்சிறப்புக்களும் பெற்று நீடுழி வாழ இறைவனை வேண்டுகின்றேன்.

**செல்வி.ந.தயாநிதி**
**(ஆசிரியை)**

# பழைய மாணவர்களின் வாழ்த்துச் செய்தி

ஆசிரியப் பணி என்பது மிகவும் உன்னதமான பணி. இப்பணி மேன்மை, அர்ப்பணிப்பு மிக்க தியாக சேவையில் தான் தங்கியுள்ளது. தன்னலமற்ற தனது கல்விப்பணியில் சமூகத்தில் ஒரு கலங்கரைத் தீபமாக ஒளிர்ந்து கொண்டிருப்பவரே ஆசிரியர் திரு.ந.நகுலநாதன் அவர்கள்.

தகவல் தொழில் நுட்ப யுகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் எமக்கு குறிப்பாக எமது இளைய தலைமுறையினருக்கு விஞ்ஞான பாடத்தை மிகவும் நுட்பமாகக் கற்பித்து விந்தைகள் பல புரிந்தவராகவே எமது ஆசிரியர் அவர்களை நாம் தரிசிக்கின்றோம். யாழ் நகருக்கு மத்தியில் அமைந்துள்ள எமது பாடசாலையான நாவாந்துறை றோ.க.வித்தியாலயம் பிரபல பாடசாலைகளுடன் விஞ்ஞானப் பாடத்திலும், பொதுப்பரீட்சைகளிலும், ஏனைய போட்டிகளிலும் வெற்றி பெறுவதற்கு ஆசிரியர் அவர்கள் நீண்டகாலம் வலுச்சேர்த்து வந்துள்ளமை போற்றுதற்குரிய விடயமாகும்.

தன்னலமற்ற சேவை, தாராளமுயற்சி, கடமையுணர்வு, பிறரை அரவணைக்கும் அன்புடமை, அனைவரையும் மதிக்கும் மனப்பாங்கு போன்ற விழுமியங்கள் வாய்க்கப் பெற்ற எமது ஆசிரியர் பாடசாலையின் உப அதிபராகவும் பணியாற்றி பாடசாலையின் வளர்ச்சியே தனது வாழ்வின் நோக்கம் எனக் கொண்டு மாணவரின் ஒளிமயமான எதிர்காலம் நோக்கியே தனது சிந்தனைகளை பறக்க விட்ட பரோபகாரியாக எமது ஆசிரியர் திகழ்ந்தார்.

தனது பாடத்துறை சார்ந்தது மட்டுமல்ல மாணவர் தம் ஒழுக்க நெறியிலும் பெரிதும் அக்கறையுடன் செயற்பட்டு நம் எல்லோரையும் ஒழுக்க சிறார்களாக வாழ வழிகாட்டியதுடன் வாழ்நதும் காட்டுபவர் நம் ஆசிரியர் அவர்கள் என்பதனை இவ்விடத்தில் பெருமையுடன் பதிவு செய்கின்றோம்.

"உள்ளுவதெல்லாம் உயர்வுள்க" என்ற வள்ளுவன் வாய்மொழிக்கு இலக்கணமாய் வாழ்ந்து எம் மனங்களிலெல்லாம் முத்திரை பதித்த எமது ஆசிரியர் ஓய்வு பெற்றாலும் அவர் கல்விப் பணி ஓய்ந்திடாது என்பது எமது நம்பிக்கை ஆகும்.

"சூரியனுக்கு ஓய்வு ஏது" இறைவனின் திருநாமத்தை தனதாக்கி வாழும். திரு.நகுலநாதன் ஆசிரியர் நலங்கள் பல பெற்று வாழ நன்றி மலர்தூவி வாழ்த்தி வணங்குகின்றோம்.

**"இன்பமே சூழ்க , எந்நாளும் வாழ்க"**

(2000/O/L மாணவர்கள்)




# மாணவ முதல்வரின் வாழ்த்துச் செய்தி



பார் புகழ் யாழ் நகர் குட திசை விளங்கும் நாவாந்துறை.றோ.க வித்தியாலயத்தின் பிரதி அதிபரான திரு.நல்லையா நகுலநாதன் அவர்களுக்கு எமது பாடசாலை மாணவர்கள் சார்பில் வாழ்த்துச் செய்தி கூறுவதில் பெருமகிழ்வடைகின்றேன். எமது பாடசாலையில் இரண்டு தசாப்தங்களுக்கு மேலாக கடமையாற்றும் பிரதி அதிபர் ஆரம்பப்பிரிவில் இருந்து இடைநிலைப் பிரிவு வரை உள்ள அத்தனை மாணவர்களிலும் மிகுந்த அன்பும் அக்கறையும் கொண்டவர். இப்பாடசாலை மாணவர்கள் கல்வியிலும் ஒழுக்கத்திலும் இணைப்பாடவிதானச் செயற்பாடுகளிலும் முன்னேற்றம் காண வேண்டும் என்பதற்காக தனது நேரத்தை முழுமையாக எமக்காக அர்ப்பணித்துச் சேவையாற்றிய பெருமைக்குரியவர். இத்தகைய பெருமைக்குரிய எமது பிரதி அதிபரைப் பெருமைப்படுத்தும் முகமாக கொண்டாடப்படும் இச் சேவைநயப்பு நன்நாளில் அவரின் எண்ணப்படி நாம் எல்லோரும் எமது பாடசாலையை பெருமைப்படுத்துவோம். என்று உறுதி அளித்து மாணவர்கள் சார்பில் பிரதி அதிபரின் பாதங்களில் நன்றியையும் வணக்கத்தையும் சமர்ப்பித்து இறைவன் அவரை நிறைவாக ஆசீர்வதிக்க பிரார்த்திக்கின்றோம்.

**பெ.கனிஸ்ரா**
**சிரேஸ்ட மாணவ முதல்வி**



## ஆசானுக்கு பழைய மாணவரின் வாழ்த்துக்கள்.

நகுலநாதன் என்னும் பேராசானிடம் கல்வி பயின்றோம் என்ற பெருமையுடன் அவர் சேவைதனைப் நன்றியுணர்வுடன் போற்றி வாழ்த்துகின்றோம்.

மதிப்பிற்குரிய திரு.நகுலநாதன் ஆசிரியர் அவர்கள் நாம் கல்வி கற்ற காலப்பகுதியில் தான் இவ்வித்தியாலயத்தில் சேவையை ஆரம்பித்தார். ஆரம்பத்தில் ஆறாம் வகுப்பு முதல் க.பொ.த (சா/த) வகுப்பு வரை விஞ்ஞான பாடத்தைக் கற்பித்தார். எளிமையான விளக்கங்களுடன் லாவகமாக விஞ்ஞானத்தை அவர் கற்பித்தமையால் எமக்கு அப்பாடத்தில் ஈர்ப்பு ஏற்பட்டது. பாடத்திற்கு மேலதிகமாக அறிவியல் விடயங்களையும், பொது அறிவு விடயங்களையும் எமக்கு எடுத்துரைத்து எம்மை பரந்த அறிவுப்பரப்பிற்கு இட்டுச் செல்வார். எமது திறமைகளை இனங்கண்டு பராட்டுவார். எம்மை யாருக்கும் அறிமுகம் செய்யும் போது எமது திறமைகளை புகழ்ந்து எம்மை ஊக்கப்படுத்தினார். நாம் தவறு விடும்போது அதை சுட்டிக்காட்டி ஆலோசனைளக் வழங்கி வழிப்படத்துவார். இதனால் நகுலநாதன் ஆசிரியரை சுற்றி எப்போதும் மாணவர் கூட்டம் அலைமோதும். ஆசிரியர் அவர்கள் எம் பெற்றோருடனும் சுமுகமாகப் பழகி எமக்கு வீடுகளில் உரிய கற்றல் சூழலை அமையப் பெரிதும் உதவினார்.

பல் துறை ஆற்றல் மிக்க ஆசிரிர் அவர்கள் மாணவர்கள் நலன்களுக்கு எப்போதும் ஆதரவு நல்கினார். நாம் கற்ற காலத்தில் எமது உதைபந்தாட்ட அணி மாவட்டத்தில் நல்ல பேறுகளைப் பெற்றது. இதற்கு எம்மை வழிநடத்திய ஆசிரியர் திரு.யோண் அவர்களுடன் நகுலன் ஆசிரியரும் உறுதுணையாக இருந்தார். நாம் போடடிகளில் பங்கேற்கும் இடமெல்லாம் சமுகம் தந்து எம்மை உற்சாகப்படுத்துவார். கணீர் குரலும்.நல்ல கருத்துக்களையும் கொண்ட சிறந்த பேச்சாளராக அவர் விளங்கினார். சமுகத்தின் நிகழ்வுகள் யாவற்றிலும் கலந்து கொள்ளும் உயரிய பண்பு அவருக்குள்ளது. இன்று கூட எம்மை சந்திக்கும் சந்தர்ப்பங்களில் வாஞ்சையுடன் எம்மோடு உரையாடுவார். நகுலன் ஆசிரியரின் சேவை ஓய்வு எம் பாடசாலைக்கும் சமுகத்திற்கும் பெரும் இழப்பேயாகும்.

நகுலன் ஆசிரியர் எமக்கு கற்பித்த போது எப்படி இருந்தாரோ அப்படியே இப்போதும் இளமையாக இருப்பது கண்டு வியக்கின்றோம். இதே இளமையுடனும், ஆரோக்கியத்துடனும் அவர் என்றும் வாழ இறையாசி வேண்டுகின்றோம்.


**திரு.அ.எமில் பிரபாகரன் (சிரேஷ்ட மாணவ முதல்வர் -1993, அலுவலர் I.O.M)**

**திருமதி. அன்ரனிற்றா எமில் பிரபாகரன். (சிரேஷ்ட மாணவ முதல்வி -1993,**

**விடுதிப் பொறுப்பாளர்,தாதியர் பயிற்சிக்கல்லூரி,யாழ்ப்பாணம்.)**


# தரம் 1A மாணவர்களின் வாழ்த்து






# தரம் 1B மாணவர்களின் வாழ்த்து





# தரம் 2A மாணவர்களின் வாழ்த்து





# தரம் 2B மாணவர்களின் வாழ்த்து



இல்லாமை இயலாமை என்ற பண்புகளை
நம்மிடத்தில் இருந்து அகற்றிய
சொல்லாண்மை மிக்க எம் உப அதிபர்
நீடுழி வாழ வாழ்த்தி நிற்கின்றோம்.

2B

# தரம் 3A மாணவர்களின் வாழ்த்து



இறந்த காலத்தில் எமக்கு ஒளியாய்
இருந்தாய்
நிகழ் காலத்தில் எமக்கு ஒளிதா
எதிர் காலத்தில் இறை யாசிகளுடன்
நலமாய் வாழ்வாய்

தரம் :- 3A

# தரம் 3B மாணவர்களின் வாழ்த்து



கி.விஜுஸ்க்கா
அ.மேரிஅபிஷா
க்.விதுசன்
ப.ஆரணி

அ.அனிஸ்மிறயா
சு.சுபானா
நி.ஜெஸ்மியா
அ.உசார்த்தன்
அ.மேரிகிருகா

பாசத்துடன் எம்மைப்
பாதுகாத்த உபாத்தியர்
திரு. சகுல நாதன் அவர்கள்
என்றும் நீடூழி
வாழ்க

ஜ.லக்சிகசனா
உ.உசாந்தினி
அ.அசசா
அ.சுபலக்சினா
செ.சஜுஸ்ரன்


கிளாட்ஸ்ரோன்

பா.பிரவின்
அ.தனுசியா
த.மேனுஜா

ஜெ.ரட்ஷிவ
செ.மார்க்கொற்கியா
ஸ்.அபிநுக்ஷ்
க.அபிஷேக்

# தரம் 4A மாணவர்களின் வாழ்த்து





# தரம் 4B மாணவர்களின் வாழ்த்து



தரம் 4 "B"

J. Ratnagopal.
வகுப்பாசிரியர்.

ஆண்டுகள் நான்கும்
அன்புடன் வழி நடத்திய
எமது அன்புக்கினிய ஆசான்
திரு. ந. நகுலநாதன் அவர்கள்
நீடூழி வாழ்க.

# தரம் 5A மாணவர்களின் வாழ்த்து




தரம் – 5A

கல்விதனைக் கசடறக் கற்க
காந்தம் போல் கல்வியைத் தொடர
ஓயாத உம் பணியினை
எமக்கு நல்கிய எம் உப அதிபர்
என்றும் சிறப்புடன் நீடூழி காலம் வாழ
சின்னஞ் சிட்டுக்கள் நாம் வாழ்த்துகின்றோம்.

# தரம் 5B மாணவர்களின் வாழ்த்து




தரம் 5B



# தரம் 6A மாணவர்களின் வாழ்த்து





தரம் - 6A


"எம்மை இன்சொல்லால் வழிப்படுத்தும்
பிரதி அதிபரே பல்லாண்டு வாழ்க!"

அ. அருள்மேரி

அ. தர்சிகா

கஸ்தூரி

# தரம் 6B மாணவர்களின் வாழ்த்து



நற்பண்புகளை எம்மில் வளர்த்து
நல்லாயனாய் எம்மை வழிநடத்த
எம் வாழ்வில் எம்மை உயரவைத்த
எம் பிரதி அதிபரை மனமார வாழ்த்துகின்றோம்

தரம் 6B மாணவர்கள் 2013

# தரம் 7A மாணவர்களின் வாழ்த்து



கனம் பிரதி அதிபர் அவர்கட்கு

" இன் முகத்துடன் எம்மை
நல்வழிப்படுத்தும் பிரதி அதிபரே வாழ்க "

தரம் - 7 A மாணவர்கள் - 2013

T. Linda

R. Sujitha

K. Jesuraj

M. Mistika Rose

A. Antony Selogini

M. Mary Staphani.

T. Merose.

J. Nilujа

J.A.J

J. Rnaold

E. Chirsty Benad

J. Antric

# தரம் 7B மாணவர்களின் வாழ்த்து



தரம் 7B வாழ்த்துச் செய்தி

நல்வழியில் நாம் நடக்க வழிநடத்திய குருவே

நீங்கள் நீடுழி காலம் வாழ் வாழ்த்துகின்றோம்

# தரம் 8A மாணவர்களின் வாழ்த்து



கனம் பிரதி அதிபர் அவர்கட்கு,
என்றும் எம்முடன் நின்று எம்மை
வழி நடத்திய பெருந்தகையே
நீடுழி வாழ்க.

தரம் 8A மாணவர்கள்.

திவ்வியா சியாமினி பா.செல்சியா செ.சாரணி

# தரம் 8B மாணவர்களின் வாழ்த்து



அன்பான பிரதி அதிபரே!

காலத்தால் செய்த உதவிகளை
ஞாலத்தில் மறவோம்

தரம் 8B மாணவர்கள்

S. Roxsan S. PUVISTEEN

A. Shamitha

S-KandN

# தரம் 9A மாணவர்களின் வாழ்த்து



கனம் உப அதிபர் அவர்கட்க்கு
கலங்கரை விளக்காய் எம்முடன்
இருந்து வழிகாட்டிய உங்களுக்கு
எமது இதயம் நிறைந்த நல்வாழ்த்துக்கள்
தரம்- 9A மாணவர்கள் - 2013

# தரம் 9B மாணவர்களின் வாழ்த்து



கனம் பிரதி அதிபர் அவர்கட்கு,

"நல்லதே நினைத்து நல்லதே செய்யும் உங்களை நன்றி நிறைந்த மனதுடன் வாழ்த்துகின்றோம்"

தரம் 9B மாணவர்கள் - 2013

அ. கபில் ராஜ்

அ. மேரி பயஸ்தீனா

# தரம் 10A மாணவர்களின் வாழ்த்து




கனம் பிரதி அதிபர் அவர்கட்கு,
பல்லாண்டு காலம் மண்ணில் நல்ல வண்ணம் வாழ
வாழ்த்துகின்றோம்.
தரம் - 10A (மாணவர்கள்) - 2013.

T. Rnesh K. Sabastian A. Suresh
M. Mahesanath R. Ronald N. Kamalini
இ. சுலக்ஷன்
S. Sinthujan A. Sulosshana J. Kopika Jesurani
J. Roesmary
A. Sudharsan. S. Vinu Stala.
அ. நிரோஜினி A. RoJamary
ரெ. விதொ T KAJANI P. Nirojana.

# தரம் 10B மாணவர்களின் வாழ்த்து





# தரம் 11Aமாணவர்களின் வாழ்த்து



கனம் பிரதி அதிபர் அவர்கட்கு.

பல்லாண்டு காலம் சிறப்புடன் வாழ்க

தரம் - 11 'A' மாணவர்கள் (2013)

A. ANuSTAN

J. nilogini

K. kirushnaveni

D. pricilda

# தரம் 11B மாணவர்களின் வாழ்த்து



கனம் பிரதி அதிபர் அவர்கட்கு
அறியாமை இருளை அகற்றி
விஞ்ஞானத்தில் மெய்ஞானம் கண்டவரே வாழி!
P. Mary kanista. தரம் 11B மாணவர்கள்

L. Suthan

A. Pavitani Jenitala

S. Selvan

T. Ronaldo.

J. Rohini

J. vinotha.

T. Antony Rehon

N. Usha

G. Nishanthini.

M. kapilraj

T. Naliny


I. Tenuth

Agiththa.

R. vithusan

S. Terencia













# திரு. நல்லையா நகுலநாதன்

ஆற்றல் - அறிவு - ஆளுமையின் சிகரமாய்

அடுத்தவர்க்கு உதவிடும் தோழனாய்

பதவிக்கு அணிசெய் தலைவனாய்

பவிட்டேதும் இல்லா மனிதனாய்

என்றும் இளமையாய், எதிலும் இனிமையாய்

எங்கள் மனதினில் இடம்பிடித்த சோதரனே

வங்கக் கடலும்-வானுயர்ந்த இமயமும்

மங்கா உன் புகழுக்குத் தலைவணங்கும்.

தங்கத் தலைமகனே – காலமெல்லாம்

நீடு வாழ்க நலமோடு- வளமோடு- புகழோடு.













**மலர் அனுசரணை:-**

**நாவாந்துறை வாழ் மக்கள்**